தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. வெளிநாடு மூன்றணா : அலுவலகம் : 'தென்றல்' சென்னை-6.

மலர் 3	சென்னை	1—12—56	சனிக்கிழமை	இதழ் 14

“நான் திருடனா?”

என்னுடைய கதை இருக்கிறதே, அது சிலருக்குப் பயங்கரமாகத் தோன்றும்; வேறு சிலருக்கு மிகச் சாரணமாகத் தெரியும்; இன்னும் சிலருக்குப் பொருள் நிறைந்ததாகப்படும். யார் என்னென்ன கருதினாலும் அதுபற்றி எனக்குக் கவலையில்லை. மற்றவர்கள் கவலைப்படுவார்கள், தூஷிப்பார்கள், கேவலமாக மதிப்பார்கள் என்று நான் அடிக்கடி எண்ணியிருந்தால் இந்த உலகத்தைவிட்டு நான் எப்போதோ மறைந்திருப்பேன். வாழ்க்கை என்பது வசதி படைத்தவர்களுக்குத்தான் என்ற மாடிவீட்டுச் சித்தாந்தத்திற்கு என் மறைவு - சாவு - உயிர் கொடுத்திருக்கும். அன்றும் சரி இன்றும் சரி, நான் மற்றவர்களைப் பற்றிச் சிறிதும் கவலைப்பட்டதில்லை. என் மனைவி கனகவல்லியின் அழுகுரலைத்தான் என் செவிகள் ஏற்றுக்கொள்கின்றன. என் மகன் கோபிநாதனின் மழலைப் பேச்சின் இன்ப ஒலியைத்தான் என் செவிகள் சேகரிக்கின்றன. ஏன்? நானென்ன மனித சமுதாயத்தின் வைரியா? இதயமில்லாத பெருங்கூட்டத்தின் தலைவனா? காட்டுமிராண்டியா? மனித மாமிசத்தையா உண்டு கழிக்கிறேன்? அல்ல! அல்ல! “உன்னைக் கவனித்துக்கொள்! உன் பெண்டுபிள்ளைகளைக் கவனித்துக்கொள்! நரைவிழுந்த தாயைப் பார்! செத்துப்போன உன் தந்தையின் குறிக்கோள் என்ன?”-இதையெல்லாம் நீயாகத்தான் கவனித்துக்கொள்ளவேண்டும்! உனக்கு யாரும் உதவிசெய்யமாட்டார்கள்! நீ ஏழை! உன்னைப் பார்த்துச் சிரிக்கவும் சப்புக் கொட்டவும் பயன்படும் நாக்கும், நல்ல வரிசைப் பற்களும் நல்ல காரியங்களுக்குப் பயன்பட மாட்டா என்று இந்தத் தமிழகமும், அந்தத் தமிழகத்தில் குடைப்பிடித்து நிற்கிற காங்கிரஸ் சர்க்காரும் எனக்கு ஆயிரமாயிரம் தடவைகள் அறிவுறுத்தியதின் விளைவுதான் என்னுடைய மனமாறுதல்களுக்குக் காரணம் என்று நான் உறுதியாக நினைக்கிறேன். நம்புகிறேன்! நீங்கள் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி 1953 ம் ஆண்டுவரை நான் கேடி. என் கேடி நம்பர் H. S. NO. 9038.

என் பெயர் ரங்கநாதன். என் தந்தையாரின் பெயர் தர்மராமானுசசாமிகள். அவர் தமிழ்ப் பண்டிதர். குடும்பக்கவலையாலேயே அவரது உயிர் கொஞ்சங் கொஞ்சமாகப் பிரிந்தது. எனது ஊர் வியாசர்பாடி.

என் பெற்றோர்கள் பட்ட கடனைக் கட்டவேண்டிய பெரும் பொறுப்பு என் தலையில்சுமத்தப்பட்டது. ஏன்? நான் ஒரே பிள்ளையா என் பெற்றோர்களுக்கு! இல்லை! கடன் வாங்கினால் அது திருப்பித்தர வேண்டிய ஒன்று என்று நான்தான் உணர்ந்தேன், அதனால்! யார் கொடுப்பார்கள்! எனக்கென்ன கெட்டி மச்சுவீடு இருக்கிறதா? காவிரிக்கரையோரத்தில் கழனிகள் உண்டா? மகன் தந்தைக் காற்று முதவிதான் என்ன? என்று உண்மையாகச் சிந்தித்ததின் விளைவு! என்னடா! திருடன்! கேவலமாக வாழ்ந்தவன் - இவன் எதை எதையோ சாட்சிக்குக் கொண்டுவருகிறானே என்று நினைக்கிறீர்கள், இல்லையா? என் தந்தை தமிழ்ப் புலவரல்லவா! அவர் படித்ததை-ஆராய்ந்ததைப் பிறருக்குச் சொன்னதை - தனித்திருக்கும்போது என் அன்னைக்கு அன்புடன் அவர் உபதேசித்ததை - மறைந்திருந்தாவது நான் கேட்டிருக்க மாட்டேனா? திருடன் தமிழ் இலக்கியக் கருத்துக்களை எதற்கோ துணைக்கிழுத்துக்கொள்கிறானே என்று யாராவது தமிழ்ப்பற்றுமிக்கோர் எண்ணினால் தயவுசெய்து அவர்கள் என்னை மன்னித்து விடட்டும்! இது கற்பனைக் கதையல்ல! கடற்கரைக்குப் போய், கனிந்த நிலவையும் குளிர்ந்த காற்றையும் அனுபவித்தபின் உதயமான சிறு கதையல்ல! வாழ்க்கைப் போரிலே முன்நின்று போர் செய்துகொண்டிருக்கும் ஏழையின் இலக்கியம் இது! இலக்கியமா இது என்று கேட்பீர்கள்! புருவும், புள்ளிமானும், வாசமலரும், வடிவுள்ள வனிதையும் வந்தால்தான் அது இலக்கியமென்று நீங்கள் கருதினால் உங்களை, இலக்கியத்தின் பூரணத்துவம் அறியாதவர்கள் என்றே நான் குற்றஞ்சாட்டுவேன்.

எனக்கு இப்போது ... கிறது. இதற்குள் நான் ... கள் சிறை செ... ஏறத்தாழ நான் சி... பட்டிருந்த காலம் ஐ... கள். நான் கொள்ளையிட்ட ... களில்,

★ பேரம்பூர் ராஜா பேங்க்

★ சௌகார்பேட்டை மார்வாடி கடைகள்.

★ பேங்களூர் மார்வாடி கடைகள்.

★ பேரம்பூர் செட்டியார் கடை.

—முதலியன முக்கிய இடங்களாகும்.

என்னை நானே பலமுறை கேட்டுக்கொண்டிருக்கிறேன், ‘ஏன் திருடினோம்?’ என்று. எனக்குக் கிடைத்த ஒரே பதில் என் தந்தையின் சோக முடிவு-என குடும்பத்தின் அலங்கோலம் - போன்ற நினைவுச் சித்திரங்கள்தாம்!

கற்றறிந்த பெரியோர்கள், திருடுவது சமுதாய அமைப்பின் குற்றம், ஆளுவோரின் திறமைக் குறைவு, என்று கூறுவதெல்லாம் நூற்றுக்கு நூறு மெய் என்பதை நான் உணர்கிறேன். திருடுவது கூடாது; அது பஞ்சமா பாதகங்களில் ஒன்று எனக் கருதியவன், பிறருக்குச் சொன்னவன் - இப்போது திருடனாகிவிட்டேன். ஏன், திருடினால்தான் நான் வாழமுடியும் என்ற நிலை, கடனைக் கட்டி என் கண்ணியத்தைக் காப்பாற்றிக்கொள்ள

— 12 ம் பக்கம் —

★ ★

சென்னை வியாசர்பாடியைச் சார்ந்த த. ரங்கநாதன் ஒருநாள் அலுவலகத்திற்கு வந்தார். அவரது கையிலே ஒரு புகைப்படமும், ஒரு காகிதச் சுருளும் இருந்தன. இரண்டு மணிநேரம் அவரிடம் முழு விபரங்களையும் கேட்டறிந்தபோது அவர் நடந்தவைகளை ஒன்றுவிடாமல் சொன்னார். அவரது வரலாறு சுவையானதாகவும், அதே போது சோகம் நிறைந்ததாகவும் இருந்தது. அவர் கொடுத்த அவரது உண்மைக் கதையைக் கொஞ்சங்கூட மாற்றாமல் இங்கே பிரசுரித்திருக்கிறோம். ‘ஆட்சியின் மாட்சி’யை மக்கள் உணர இந்தக் கட்டுரை ஓரளவு பயன்படும் என நினைக்கிறோம். இதுபோல, தமிழகத்தில் எத்தனை ரங்கநாதர்கள் இருப்பார்கள் என்பதையும், அவர்கள் நினைத்துப் பார்க்கட்டும். திருப்பதி ரங்கநாதனை நினைத்துக் கோட்டாவி விடுவோரைக்கூட வியாசர்பாடி ரங்கநாதனின் வாழ்க்கைச் சரித்திரம் உலுக்கினாலும் ஆச்சரியமில்லைதான்.

(ஆ-ர்.)

நள்ளிருள் நேரம். அழகிய அந்த மாளிகை சாவின் நிழல்போல காட்சி தந்து கொண்டிருந்தது. அம்மாளிகையிலே சுடுகாட்டின் பயங்கர அமைதி குடிகொண்டிருந்தது. தந்த ஆசனத்திலே கூம்பிய மலரைப்போல் சோகம் கப்பிய முகத்தோடு பெண்ணொருத்தி அமர்ந்திருந்தாள். வாழ்வை இழந்தவள்போல தலையைக் கையில் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்தாள் அந்தத்தளிர் மேனியாள். சிறைக்குள் வெ அடைப்பட்ட கைதி விடுதலையை எண்ணி, நம்பிக்கையற்ற பார்வையால், சிறையின் சுவர்களைப் பார்ப்பதைப் போல, அவள் எங்கோயோ பார்த்துக்கொண்டிருந்தாள்.

நேரம் சென்றுகொண்டேயிருந்தது. கண்ணீர் முத்து முத்தாக தவருது கன்னங்களிலே உருண்டோடிக் கொண்டேயிருந்தன. 'தனிமையை' தனது துன்பம் போக்கும் மருந்தென எண்ணிக் கொண்டிருந்தாள். அவளது இதயத்திலே தேங்கிக் கிடந்த வேதனை, பயங்கர உருவமெடுத்து குமிறியெழும் எரிமலையென வெடித்துக் கிளம்பியது. கையிலே பேனவை எடுத்து எழுத ஆரம்பித்தாள். கண்ணீர் அருவியென ஓடிக்கொண்டிருந்தது.

"அன்புத் தங்கைக்கு,

இதயம், அதனுள்ளே மறைந்துகிடக்கும் ரகசியங்களைத் தாங்க முடியாதபோது, கண்ணிமைகள் கண்ணீரின் சுமையைத்தாழமுடியாதபோது, சொற்கள் மூலமாகத்தானே, மனிதன் பாரத்தை குறைத்துக்கொள்ள முடிகிறது. ஆமாம்! வாலிபன் காதலுணர்ச்சியிலே இன்பம் பெறுவதைப் போல, அடிமை, டிமைத்தனத்திலே இன்பம் தைப்போல துயரத் ஒரு இன்பம் ான் செய்கிற த ஏன் எழுதுகிறேன் மா?

நயத்திலே தேங்கிக் கிடக் ஆசைக் கனவுகள் எனக்கு கவிதை எழுதும் ஆற்றலைத் தந்துவிட்டன. அழகின் சிரிப்பைக் கண்டு ரசித்து எழுத்திலே வடிக்கும் கவிஞனுகி விட்டேன் நான். பசியால் உந்தப்பட்ட மழலை பேசும் மதலை, தாயின் மார்பை சுவைப்பதிலே காணும் இன்பத்தைக் காண்கிறேன் நான்!"

"எனது சோக வரலாற்றைக் கேள்! கேட்டு, எனது துயரத்திற்காக சிறிது கண்ணீரைச் சிந்து! ஆமாம்! உனது இதயத்தின் அடித்தளத்திலிருந்து எழும் பரிவால், நீ விடும் சூடான கண்ணீர் என் இதயத்திற்கு இதமளிக்கும். சோகத்தால் நான் சொல்ல வந்ததை மறந்துவிட்டேன், என் கதையைக் கேள்!

மணமும், புகழும் படைத்த ஒருவருக்கு மண முடித்துத் தந்தார். செல்வம், செல்வத்தை விரும்புவது தானே உலக இயல்பு! ஆனால் அங்கேதான் என் வாழ்வின் சோக கட்டமே ஆரம்பமாகிறது. செல்வத்தை நான் துரும்பாக நினைத்தேன்; ஆனால் செல்வமெனும் பலி பீடத்திலே எனது இதயத்து ஆசைகளும் கனவுகளும் பலியிடப்பட்டுவிட்டன. பூசாரியின் கைப்பிடியிலே நடுங்கிக்கிடக்கும் பல பொருளின் இதயம் நடுங்குவதைப்போல எனது இதயம் நடுங்குகிறது. இதைவிட சாவு எனக்கு மிக மிக இன்பமளிக்கும். நான் என் கணவனைப் பார்க்கிறேன். அவர் என்னைத் தன் கண்ணின் மணி போல எண்ணிக் காக்கிருர்! தான் தவம் கிடந்து பெற்ற பெரு நிதி எனப் போற்றுகிருர். எனது முகத்திலே புன் சிரிப்பைக் காண தங்க நாணயங்களை வாரி யிறைக்கிருர். ஆனல் இவையனைத்தும் என் காதலனின் கடைக்கண் பார்வைக்கு முன் தூசு! என் காதலனின் ஒரே ஒரு புன்னகைக்கு, கடைக்கண் பார்வைக்கு, இந்த மாளிகை வாரம், அணி மணிகள், ஆள் அம்பு, குவிந்து கிடக்கும் செல்வம், அத்தனையையும் தியாகம் செய்யத் தயாராயிருக்கிறேன்.

அன்பே! என்னை இதற்காக கேலி செய்யாதே! நான இப்போது பெண்களின் இதயத்தை எல்லாம் தெரிந்து கொண்டு விட்டேன். காதலுக்காக ஏங்கித் துடிதுடிக்கும் அவர்களது இதயத்தை இப்போது நான் உணர்கிறேன். பெண்களின் இதயம்! காதல் எனும் மது நிறைந்த குடம். காலத்தை வெற்றி கொண்ட ஜீவனின் உதடுகள் தான் அதைச் சுவைக்க முடியும். பெண்களின் இதயம்! ஒரு புத்தகம்! ஆம், துன்பமும், இன்பமும் மகிழ்ச்சியும், ஆரவாரமும், சோகமும், துயரமும், கலந்து கலந்து எழுதப்பட்ட உன்னதப் புத்தகம் அது. ஒரு பெண்ணின் காதலனைத் தவிர வேறு யாராலும் படிக்க முடியாது. காலம் காலமாக அவருக்காக, அவளது இதயத்துக்காக காத்துக் கிடக்குர் காதல் உள்ளத்தால்தான் அவளது இதயத்தை மலர்விக்க முடியும்!

அன்பே! இம்மாளிகைவாசத்தால் பெண்களின் ஆசைக் கனவுகளைப் பற்றி அதிகமாக அறிந்து கொள்ள முடிகிறது. அன்றொரு நாள்! வறுமையோடு போராடும் என் காதலன் என்னைக்காண இங்கே வந்திருந்தான்! அவனது காதல் நிறைந்த பார்வைக்கு முன், நிறம்பி வழியும் பொக்கிஷமும், மாளிகையும் எனக்கு துச்சமாகிவிட்டன.

நான்! பிரிவின் துயரம் தாங்காமல் வருந்தி கொண்டிருக்கிறேன்! தந்தையின கொடுமைக்கு பலியாகிவிட்டேன். குற்றம் செய்யாமலேயே காலமெனும் சிறைக்குள்ளே அடைக்கப்பட்டேன்.

எனக்கு ஆறுதல் கூருதே! கொடுமை எனும் வேல் பாய்ந்த எனது உள்ளத்தில் காதலனைப் பற்றியெழும் கனவுக்கோட்டைகளே எனக்கு மருந்தாக இருக்கின்றன. எனது ஆசையெல்லாம் மேகமண்டலத்திலே தான் உருவம் பெறப் போகின்றன.

நான கண்ணீரு குப்பதை நிறுத்திவிட்டேன்! பெருமூச்சு விடுவதை மறந்துவிட்டேன்! என்ருவது ஒருநாள் என் காதலனை கட்டிஅணைத்துக்கொண்டு துடிக்கும் என் உதடுகளில் அவனது முத்தத்தைப் பெற வேண்டும் என காத்துக் கிடக்கிறேன்.

என்னைப் பலிக்காதே! என் கனவனுக்குப் பணிவிடைகள் செய்கிறேன். சமுதாயம் வகுத்திருக்கும் சட்ட திட்டத்துக்குக் கட்டுப்பட்டு அடங்கி நடக்கிறேன்! மரியாதை செய்கிறேன் மனைவியாய் இருக்கிறேன் ஆனலும் எனது உள்ளத்தை அவருக்குக் கொடுக்க என்னல் முடியவில்லை! ஏற்கனவே இதயத்தை எனது காதலனுக்குக் கொடுத்துவிட்டேன்.

இதயம் விரும்பியவனை அடையாமல் வேறு ஒருவனுக்கு மாலையிட்டு மனைவியாகி ஏங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்று காலம் வகுத்துவிட்டதுபோலும். வாழ்நாள் முழுதும் இப்படியே கழித்து விடுகிறேன்! ஏங்கி ஏங்கி செத்து விடுகிறேன். பிறகு மேக மண்டலத்திலே என் காதலனைக் காண்பேன்! காதல் மொழி பேசி, பறந்து திரியும் வானம்பாடிகளாய் பாட்டிசைக்கும் குயில்களாய்த் திரிவோம். கொடுமை நிறைந்த இந்த உலகத்தின் சட்ட திட்டங்கள், நாங்கள் கணவன் மனைவியாவதை அங்கே தடுக்க முடியாது. அப்போது, துயரம் நிறைந்த இந்த வாழ்வை கனவென்று எண்ணி மறந்துவிடுவேன்"

—அவள் எழுதுவதை நிறுத்திவிட்டாள். கைகளால் முகத்தை மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள். இதயத்தின் புனிதமான ரகசியங்களையெல்லாம் வெளியே கொட்டிவிட்டதால், உள்ளம் குமுறியது போலும் மீண்டும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். ஆம்; அவை காதலருக்கும் மலர்களுக்கும், இதம் தரும் காற்றோடு கலந்து விட்டன. சிறிது நேரம் சென்றது. மீண்டும் எழுதத் தொடங்கினள்.

"தங்கையே என் காதலனை நினைவு வைத்திருக்கிருயா? இவரது ஒளி சிந்தும் கண்களை, துயரம் சூழ்ந்த புருவங்களை, சோகம் காட்டும் புன்னகையை கம்பீரமான பேச்சை, நீ மறந்திருக்கமாட்டாய். பொருள்களை நீண்ட நேரம் உற்றுப் பார்த்து, கண்கள் திகைப்பைச் சிந்த, உள்ளம் பெருமூச்சுவிட நிற்கும் அவரை நீமறந்திருக்கமாட்டாய். அவரது உயர் எண்ணங்களை, லட்சியங்களை நீயறிவாய். ஆமாம்! இவையெல்லாம் அவராகவே தேடிப் பெற்றவை! அவரது முன்னேர் அவருக்குத் தேடிவைத்தச் சொத்தல்ல! இதனல்தான என் தந்தை அவரை வெறுத்து ஒதுக்கிவிட்டார்."

அன்புத் தங்கையே! சமுதாயத்தின் கட்டு திட்டங்களுக்கு என் நெஞ்சத்து ஓசைகளும் எனது உடலும் பலியாக்கப் பட்டுவிட்டன. அறிவற்றவர்களுக்காக நான் என்னையே தியாகம் செய்து கொண்டேன். வாடி வதங்கும் எனக்குக் கருணை காட்டு. ஆமாம்! நள்ளிருளிலே என் இதயத்து ரகசியங்களையெல்லாம் உனக்காகவே எழுதிக் கொண்டிருக்கிறேன். எனக்காக பரிவு காட்டு! என் நெஞ்சில் மலர்ந்து கருகிவிட்ட காதல் உன் நெஞ்சிலாவது மலர்ந்து சிரஞ்சீவியாக இருக்கட்டும்"

—காலை மலர்ந்தது கதிரவன் தன் பொற் கிரணங்களை உலகப் பொருள்கள்மீது வாரியிறைத்து அவற்றைத் தங்கமாக்கிக் கொண்டிருந்தான். அவள் எழுந்தாள். ஆனல் தூக்கம் அவளது இமைகளை அழுத்தியது. சோர்வால் தூங்கிவிட்டாள். தூக்கத்திலே அவள் மோகனமான இனிய கனவுகளைக் கண்டுகொண்டிருந்தாள். அவளதுநிலாமுகம்பெண்ணின் பெரும் பொருளை வெடித்துக் கொட்டிவிடக் காத்துக் கொண்டிருப்பது போலிருந்தது.

—சிந்தாமணி.

4

தைமூரைக் கண்டதும் உம்மதுல் முக்காடிட்டுக்கொண்டு உள்ளே ஓடிவிட்டாள். இரானிய உடையிலிருந்த சேமியா தூண் மறைவில் ஒதுங்கிக்கொண்டாள். யஜ்தானி எப்படியோ நிலையைச் சரி செய்துகொண்டார்.

"பாதுஷா எங்கள் மாளிகைக்கு வந்தது பற்றி மெத்தச் சந்தோஷம்!" என்று முகமலர்ச்சியோடு சொன்னார் யஜ்தானி.

தைமூர் அந்த உபசார வார்த்தைகளையெல்லாம் கவனித்ததாகத் தெரியவில்லை. தாகமெடுத்திருந்த அவனது விழிகள் மாளிகைக்குள்ளே போடப்பட்டிருந்த திரைகளையெல்லாம் துருவித் துருவிப் பார்த்தன.

"பாதுஷா அமரலாம்! ஆசனம் போட்டிருக்கிறது! பானம் ஏதாகிலும் கொண்டுவரட்டுமா?" -யஜ்தானி தன்னையுமறியாமல் இப்படியெல்லாம் நடந்துகொண்டார். அவரது பணிவிடைகளில் புதுப் பழக்கம் தென்பட்டது. பரபரப்புக் காணப்பட்டது. தைமூர் இதையெல்லாம் கவனிப்பதுண்டு. புருவத்தின் நெறிப்பிலே பகைவனின் நெஞ்சை யறியும் திறன் பெற்றவனல்லவா அவன்! தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டான். காலம் சிலருக்குப் பணிந்துவிடுகிறது, சிலர் காலத்திற்குப் பணிந்து விடுகிறார்கள் என்று தைமூர் எண்ணிக்கொண்டு வெண்கலக் குறிச்சியில் அமர்ந்தான்.

மெல்லிய கொடிக்கயிற்றில் விலையுயர்ந்த ஆடைகள் தொங்கிக் கொண்டிருந்தன. யுவதிகள் அணியும் துருக்கி நாட்டு நகைகள், விரித்திருந்த பட்டுத்துணியில் துடைத்து வைக்கப்பட்டிருந்தன. கலங்கரை விளக்கைப்போல் சுற்றிக்கொண்டிருந்த தைமூரின் முகம், நீலத்துணி தொங்கிய ஒரு ஜன்னலருகில் வந்ததும் நிலைத்து நின்றுவிட்டது. உயரமான நிலைக்கண்ணாடிக்கு எதிரே நின்று உம்மதுல் வாசனைத் தூளை முகத்தில் தடவிக்கொண்டிருந்ததை தைமூர் பார்த்தான்.

திறமையினால் புகழ்பெற்றவர்களும், பெரிய மனிதர்களானவர்களும் ஆசையை வெளிப்படையாகக் காட்டிக்கொள்வது தரக்குறைவு என நினைக்கிறார்கள். தன்னுடைய நிலைக்குத் தகாது எனக் கருதுகிறார்கள். தைமூர் பெருந்தன்மை மிக்கவன், கௌரவத்தை மதிப்பவன், எத்தகைய எதிர்ப்பையும், சூழ்ச்சிகளையும் தனக்குச் சாதகப்படுத்திக்கொண்டு விட முடியும் எனத் திடமாக நம்புகிறவன். எனவே யஜ்தானி தன்னைக் கவனிக்கிறார் என்பதைக் கடைக்கண்ணால் அறிந்ததும் முகபாவத்தையே மாற்றிக்கொண்டான். அகமும் புறமும் அன்பு சுரக்க ஆசையோடு பேசினான்.

யஜ்தானி அன்றுதான் தைமூருடன் நண்பரைப்போல் அருகில் அமர்ந்து பேசியிருக்கிறார். தூரத்திலிருந்து பார்த்தபோது காணப்பட்ட தைமூரின் எடுப்பான தோற்றத்தை அன்று அவரால் காணமுடியவில்லை. விகாரமான முகம்! உடலெங்கும் வெட்டுக்காயங்கள்! -யஜ்தானி, சகித்துக்கொள்ளமுடியாமல் கண்களை மூடிக்கொண்டார்.

மௌனமாக இருந்த தைமூர் திடீரென்று பேச ஆரம்பித்தான்.

"அபீபைப் பார்க்கவேண்டும்."

"அவன் அரண்மனைக்குத்தானே வந்தான்."

"என் விருப்பத்தை ஏற்றுக் கொண்டுவிட்டானா?"

"......" யஜ்தானி பதில் சொல்லவில்லை.

"ஏன், என் அபீப் மறுத்துவிட்டான்?"

"இல்லை, பாதுஷா! ஒப்புக்கொண்டான். ஆனால் அவன் அன்னை பயப்படுகிறாள். ஒரே பிள்ளை என்று அழுகிறாள்"-என்றான்.

தைமூர் இதைக் கேட்டதும் பலமாகச் சிரித்தான். "தைமூர், வெறியன், கொடியவன், அரக்கன், அவனிடம் பிள்ளை பணிபுரியலாமா என்று பயமா? அபீப் எனக்குப் பணிபுரிய வரவில்லை; நான்தான் அவனுக்குச் சேவை செய்யப் போகிறேன். அவன் என்னை மனிதனுக்க வந்த பரம்பொருள்! அல்லா!" என்று உருக்கமுடன் சொன்னான். தூணின் மறைவிலிருந்த சேமியா கண்களைத் துடைப்பதை அவனது ஓரக்கண்ணால் பார்த்தான்.

யஜ்தானியின் முகத்தில் அர்த்தமில்லாத ரேகைகள் படர்ந்திருந்தன. அப்போது பணிப் பெண் சுவைநீர் கொண்டுவந்து கொடுத்தாள். மடமடவென்று குடித்துவிட்டு தைமூர் விடை பெற்றுக் கொண்டான். வெளிக் கதவருகில் வந்ததும் கம்பளியைப் போர்த்திக் கொண்டு சுற்றிப் பார்த்தபடி வேகமாக நடந்தான்.

வாசற்படியில் நின்று பார்த்துக் கொண்டிருந்த யஜ்தானியின் கண்களுக்கு மலைநாட்டு மனிதன் ஒருவன் அனாதையாகப் போவது போலிருந்தது. "தைமூர் இந்நேரம் என்ன செய்து கொண்டிருப்பான்? மதுவைக் குடித்துக் கொண்டிருப்பானா? மங்கையின் செவ்விதழை சுவைத்துக் கொண்டிருப்பானா? எந்த நாட்டை என்ன செய்யத் திட்டம் தீட்டுகிறானோ? என்றெல்லாம் ஒவ்வொரு மன்னனும் எண்ணிக் கதிகலங்கி நிற்கிறான். ஆனால், அந்த அதிசய மனிதன் தன்னந்தனியனாய் மஞ்சுவிரட்டுக் காளையைப்போல், வெறித்துக் கொண்டு போகிறானே" என்று யஜ்தானி பிரமித்துப் போய் உள்ளே வந்தான். சேமியா உம்மதுலைப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள். உம்மதுல் அதையெல்லாம் பொருட்படுத்தவில்லை. அரண்மனைக்குப் போவதற்காக ஆண்வேடம் போட்டுக்கொண்டிருந்தாள்.

"உம்மதுல்...!"

"இ...ம்!"

"நீ தைமூரை நம்புகிறாயா உம்மதுல்!"

"நிச்சயமாக!......ஏன் நீங்கள் அவரை நம்ப மறுக்கிறீர்கள்? அடக்குவாரில்லாமல், தோற்று வாரில்லாமல் வளர்ந்துவிட்டவர் தைமூர்."

"இவ்வளவு வயதுக்குப் பிறகும் எப்படியம்மா தைமூரைத் திருத்தப் போகிறாய்?"

"நீங்களும் பார்க்கத்தானே போகிறீர்கள். நான் சந்தோஷமாக இருக்கிறேன்; ஆடிப்பாடி மகிழ்கிறேன்- என்றெல்லாம் நீங்கள் நினைக்கிறீர்கள். அதனால்தான் என்னைத் தடுக்கிறீர்கள். உண்மையைச் சொல்லிவிடுகிறேன். நான் வாழ்க்கையிலே பெருத்த தோல்வி கண்டவள்! ஏமாந்தவள்! நெருப்பை ரத்தினமென்று கருதியவள்!" - உம்மதுல் திடீரென்று உணர்ச்சி வசப்பட்டு வார்த்தைகளைக் கொட்டினாள்.

யஜ்தானி துடித்தார். குறுக்கே தடுத்து நிறுத்த அவருக்கு சக்தியில்லை. உச்சஸ்தாயியில் கதறிவிட்டார்-"உம்மதுல்! உம்மதுல்!"

வியர்த்து விறுவிறுத்து உம்மதுல் தூணில் சாய்ந்தாள். அவள் அன்னை சேமியா விசிறினாள். யஜ்தானி ஒவ்வொரு விநாடியும் உம்மதுலின் வாயசைப்பையே எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

சேமியா கண்களைக் கசக்கிக் கொண்டே தளதளத்த குரலில் உம்மதுலைக் கேட்டாள்.

"கண்ணே, சற்று முன்பு என்னென்னவோ சொன்னாயே? என்ன அது? சொல்லக்கூடாதா? இவ்வளவு நாட்களாக உன் மனதிலே பூட்டிவைத்திருந்த அந்த ரகசியத்தை நாங்கள் தெரிந்து கொள்ளக்கூடாதா? சொல்லம்மா! அப்பா கலங்கியிருப்பது உனக்குத் தெரியவில்லையா? பாதுஷாவையே படியவைத்த உன்னை திகிலடையச் செய்யும் அந்த ரகசியம்தான் என்ன?" சேமியா கெஞ்சினாள்.

உம்மதுல் தலையை நிமிர்த்தி ஜன்னல்களைப் பார்த்தாள். வாசலைப் பார்த்தாள். குறிப்பறிந்த யஜ்தானி வேகமாகப் போய் ஜன்னல் திரைகளை விரித்துவிட்டார். வெளிக் கதவைத் தாளிட்டார். மீண்டும் வேகமாக இருந்த இடத்திற்கு ஓடி வந்தார். அவர் வந்து உட்காருவதற்கும் உம்மதுல் முகத்தைத் துடைத்துக்கொண்டு ரகசியத்தைச் சொல்ல ஆரம்பிப்பதற்கும் நேரம் சரியாக இருந்தது.

(தொடரும்)

சட்டக்கல்லூரியில் கண்ணதாசன்

21-11-56 மாலை சென்னை சட்டக்கல்லூரி தமிழ்மன்ற முத்தமிழ் விழா கல்லூரிமண்டபத்தில் நடைபெற்றது. மன்றச் செயலாளர் தோழர் மாயாண்டி அனைவரையும் வரவேற்றுப் பேசினர். கல்லூரிப் பேராசிரியர் கோபால கிருஷ்ணன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார். ஆசிரியர் கண்ணதாசன் 'இலக்கியத்தில் காதல்' என்ற தலைப்பில் நீண்டநேரம் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

புகைப்படம் :

அங்கேரியும் ரஷ்யாவும்

மூன்றாவது உலகப் போர் மூண்டுவிடுமோ என்று உலகத்தின் பல பாகங்களில் உள்ள மக்கள் பயத்தோடு எதிர்பார்த்தனர். காரணம் உலக ஆதிக்கப் போரில், இரண்டு பெரிய வல்லரசுகள், மக்கள் விருப்பத்தைப் புறக்கணித்து ஈடுபட ஆரம்பித்தது தான். ஆனால், அவ் வல்லரசுகளின் எண்ணத்திற்குக் குறுக்கே, உலக மக்கள் ஒன்றுதிரண்டு நின்றதால், உலகப் போரின் பயங்கர சூழ்நிலை சற்று தணிவடைந்துள்ளது.

ஒருபுறம்—பிரிட்டன், இஸ்ரேல், எகிப்து மீது படையெடுத்ததை சாக்காகக் கொண்டு, தகராறுக்குரிய சூயஸ் கால்வாயைப் பாதுகாக்கப் போவதாகக் கூறிக்கொண்டு, எகிப்தைத் தாக்கித் தன் படைகளை நுழைத்தது.

மறுபக்கம்—கிழக்கு ஐரோப்பாவில் உள்ள அங்கேரியில்—உள்நாட்டில் மக்கள் தங்கள் நியாயமான குறைகளுக்காக, அந்நாட்டு சர்க்காரை எதிர்த்துப் போராடினார்கள். அந்தப் போராட்டத்தை நசுக்கிவிட ரஷ்யத் துருப்புகள் தலையிட்டு போர் புரிந்தன. இந்த இரண்டு காரணங்களும், உலகப் போருக்கு வித்தூன்றக் கூடியதாக அமைந்தன.

எகிப்தில் பிரிட்டன் நடந்து கொண்ட முறை மிகவும் தவறானது — பிற்போக்கானதுமான ஆக்கிரமிப்பு தான் என்பதில் முதலாளித்துவ முகாமின் தலைமையான அமெரிக்கா முதல், வாலான இந்தியா வரையில் ஏகோபித்த கருத்து ஒற்றுமை காட்டியது. கண்டனம் செய்தன. ஐ. நா. சபையில் நேர்மையாக நடந்தும் கொண்டன.

ஆனால், அதே நேரத்தில் முற்போக்கு சக்திகளின் தலைவன் உலகத்தில் தன்னைத் தவிர வேறு யாரும் கிடையாது, இருக்கவும் முடியாது, தான்தான் உலக நாடுகளின் ஆதிபத்திய உரிமைகளை உணர்ந்து, மதிப்புக் கொடுத்து வருவதாகவும், தன்னைத் தவிர பிற நாடுகளுக்கு உண்மையான ரட்சகன் யாரும் இருக்க முடியாது என்று நேற்று வரைகூறிவந்த ரஷ்யா, அங்கேரியில் நடத்திய ஆக்கிரமிப்பைப் பற்றியும், நிரபராதி மக்கள்மீது டாங்குகள், யந்திரத் துப்பாக்கிகள், பாஸ்பரஸ் குண்டுகள், பீரங்கிகள் ஆகியவற்றை உபயோகித்து, ஆயிரக் கணக்கான மக்களை கொன்று குவித்ததைப் பற்றி உலக நாடுகளிடையே பலவாறான அபிப்பிராயங்கள் தாண்டவமாடினாலும், பெருவாரியான நாடுகள் அதையும் ஆக்கிரமிப்பாகவே, கொண்டு ஐ.நா. சபையில் நேர்மையான நடவடிக்கை எடுக்க முயல்வதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

அயோக்கியன் என்று உலகம் முழுவதும் தெரிந்த ஒருஅயோக்கியன், ஒரு அயோக்கியத்தனமான காரியம் செய்தால், அவனிடத்திலே நேர்மையை எதிர்பார்க்கிற நாம்தான் முட்டாளாக்கப்படுவோம். ஆனால், இதுவரை யோக்கியன் என்று சமூகத்தில் மதிக்கப்பட்டு, அதற்காகவே, விசேஷ மரியாதையும் பெற்று வருபவன், அயோக்கியத்

பகல் ராஜாக்கள் நடத்தும் 'ராத்திரிக் கொள்ளை'!

தனம் செய்தால், அதைத்தான் நாம் அனுதாபத்தோடு கண்டித்துத் திருத்தி, அவன் வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்த முயல்வோமே ஒழிய, அயோக்கியனின் வீழ்ச்சியை அல்ல. அதற்காக நேற்றைய வரையில் யோக்கியனாய் இருந்த காரணத்திற்காக, இன்றைக்கு அவன் செய்த தவறான செயலை, சரியானது என்று நாம் பாராட்டுவோமானால், நிச்சயமாக இதைப் போன்ற பயித்தியக்காரச் செயல் வேறு எதுவும் இருக்க முடியாது. தவறை எடுத்துச் சொல்லித் திருத்துவதுதான் புத்தியுள்ள செயலாக இருக்க முடியும்.

அங்கேரியில் ரஷ்யா தலையிட்டது ஆக்கிரமிப்புதானா இல்லையா? என்பதைப் பற்றி உலக நாடுகளிடையே அபிப்பிராய வித்தியாசம் இருந்தாலும் கூட, ரஷ்யப் படைகள் தலையிட்டது தவறு என்பதில் கருத்து வேற்றுமை அதிகம் கிடையாது. அங்கேரியில் ரஷ்யத் தலையீடு ஆக்ரமிப்புத்தானா என்பதை நாம் ஆராய்வோம்.

அங்கேரி ஒரு ஆதிபத்ய உரிமையுள்ள சுதந்திர நாடுதான் என்பதில் யாருக்கும் சந்தேகம் கிடையாது. ஏனென்றால், அங்கேரியை ஒரு சுதந்திர நாடு என்பதை உலக நாடுகள் யாவும் ஒப்புக்கொண்டு, ஐ. நா. சபையிலும் பிரதிநிதித்துவம் அளித்திருக்கிறது. ஏதோ ஒரு முறையால் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்காரும் அங்கு செயல்படுகிறது. இதில் யாருக்கும் எந்தவித அபிப்பிராய வித்தியாசமும் இருக்க முடியாது. அப்படியானால், அங்கேரிக்கும், ரஷ்யாவுக்கும் உள்ள உறவு என்ன? அங்கேரியும், ரஷ்யாவும். இரண்டும் இரு வேறு, ஆதிபத்ய உரிமை உள்ள இரண்டு நாடுகள் ஆகும். அவைகளுக்கிடையே நட்பு இருந்தன. கொள்கை ரீதியில் இரண்டு நாடுகளிலும் அனுஷ்டிக்கப்பட்ட முறைகள் ஒன்றாக இருந்தது. இதைத் தவிர வேறு உறவுகள் கிடையாது.

அங்கேரியில், ஏற்கெனவே இருந்த சர்க்கார் மிகப் பெரிய தவறுகள் இழைத்தது என்பதையும், மக்கள் அதை ஆத்திரமாகக் கண்டிக்க முற்படுவது நியாயமே என்றும் தற்பொழுதைய அங்கேரி சர்க்கார் (ஜனோஸ் காதர் சர்க்கார்) "மக்கள் ஆட்சியைக் காக்க வாரீர்" என்ற மகுடமிட்டு ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது. அப்படியானால் மக்கள் தங்கள் நியாயமான கோரிக்கைகளுக்கு கிளர்ந்தெழுந்தார்கள் என்பது உண்மை என்பதை தற்போதைய சர்க்காரே ஒப்புக்கொள்ளுகிறது. ஆக, இது ஒரு உள்நாட்டு விவகாரம் என்பதில் சந்தேகமில்லை. ஒரு சுதந்திர நாட்டில் உள்ள மக்கள் தாங்கள் விரும்புகின்ற ஒரு ஆட்சி முறையை அமைத்துக் கொள்வதில் யாருக்கும் எந்தவித ஆட்சேபமும் இருக்க முடியாது.

அப்படியானால், அங்கேரி மக்கள் போராட்டம் உள்நாட்டு விவகாரம் மட்டுமல்லாமல், தங்கள் தலைவிதியை தாங்களே நிர்ணயித்துக் கொள்ள எழுந்த ஒரு கிளர்ச்சிதான். இந்த கிளர்ச்சியை ஒடுக்கத்தான் ரஷ்யத் துருப்புகள் அங்கேரியில் தலையிட்டு, அம்மக்களுக்கு எதிராகத் தங்கள் படை பலத்தைக் கொண்டு நடவடிக்கையில் ஈடுபட்டது. இது சர்வதேச அடிப்படையில், ஒரு நாட்டின் உள் விவகாரத்தில் பிறநாடு தலையிடுவது சரியா? தவறா? ஆக்கிரமிப்பா? இல்லையா? என்பது தான் தற்போதைய பிரச்சினை. அதை விட்டுவிட்டு, எதை எதையோ சுட்டிக்காட்டி நியாயம் கற்பிக்க முயல்வது, உண்மையை மூடி மறைக்கத்தான் பிரயோஜனப்படும்.

ரஷ்யா, தான் அங்கேரியில் தலையிட்டதற்குக் காரணங்கள் ஆயிரம் கூறலாம். உண்மையாகவும் இருக்கலாம், பொய்யாகவும் இருக்கலாம். அது பின்னால் விவாதிக்க வேண்டிய பிரச்சினையாகும். முதலில் ரஷ்யா தன் துருப்புகளோடு அங்கேரியில் புகுந்துப் போரிட்டது சரியா என்றால் நிச்சயமாகத் தவறு என்றுதான் நம்மால் கூறமுடியும்.

ரஷ்யா, அங்கேரியில் தன் விருப்பப்படி போகவில்லை என்றும், "நாகி சர்க்கார்" அழைப்பின் பேரில் சென்றதாகவும் கூறியது. ஆனால், அதே இம்ரே நாகி ரஷ்யத் துருப்புகள் வெளியேற வேண்டும் என்று கோரிய போது, வெளியேறாமல் மேலும் புதிய படைபலத்தைக் கொண்டு வந்து குவித்து வைத்தது. ரஷ்யத் துருப்புகளை வெளியேற்றித் தங்கள் "நடு நிலைமையை"ப் பாதுகாக்க ஐ. நா. சபை உதவ வேண்டும் என்று இதே "இம்ரே நாகி சர்க்கார்" ஐ. நா. வின் உதவியைக் கோரியது. அப்படியானால், எந்த இம்ரே நாகி அழைத்தாரோ, அவரே வெளியேறச் சொன்னபோது, ரஷ்யா உண்மையிலேயே நல்லெண்ணத்தோடு நடந்து கொள்ள விரும்பி யிருந்தால் வெளியேறியிருக்க வேண்டும். ஆனால், அதற்கு மாறாக அட்டையைப் போல் ஒட்டிக் கொண்டது. அதற்குப் பிறகு ஒரு புதிய காரணம் கூறப்பட்டது. "இம்ரேநாகி" தான் ரஷ்யத் துருப்புகளின் உதவியை நாடினார் என்பது உறுதிப்படுத்தப் படாத ஒரு செய்தியாகும். கார

— 9-ம் பக்கம் —

வெண்பாப் போட்டிக் கவிஞர்களுக்கு

இதுவரை தென்றல் இதழில் வெளியான வெண்பாப் போட்டியில் பரிசு பெற்ற கவிஞர்கள் தங்களுடைய புகைப்படத்தை மறுதபாலிலேயே அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி :
நிர்வாகி,
கண்ணதாசன் பதிப்பகம்,
2-127, மவுண்ட் ரோடு, சென்னை - 6.

'தென்றல்'
15-12-56-ம் தேதி இதழிலிருந்து

கண்ணதாசன் எழுதும்

ஒரு மணிநேர நாடகங்கள் !

தேர்தல் சம்பந்தமானவை! — மேடைகளில் நடிக்க, வசதியோடு, பாடல்களுடன் வெளிவரும்.
இனிய வசனம்... சுவையுள்ள கதைகள் !
தென்றல் :: சென்னை-6.

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 3 ‖ 1—12—56 ‖ இதழ் 14

நாவலோ, நடந்ததோ ?

அரியலூர் என்றவுடன் ஆற்றல் மிகுந்த தலைவர்களை அடைத்து வைத்திருந்த சிறைச்சாலைதான் நமக்கு நினைவுக்கு வரும். அந்நியரான ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து நம்மவர்கள் எனப் பெருமையடித்துக் கொள்ளும் காங்கிரசார் ஆட்சிவரை அரியலூர் சிறை வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. எழுதத் தெரிந்த தலைவர்களெல்லாம் அரியலூர் சிறை பற்றி எழுதத் தவறியதில்லை. கல்கி கிருஷ்ணமூர்த்தியிலிருந்து காமராசர்வரை அரியலூர் சிறையின் மகாத்மியத்தைப் பற்றி பேசித் தீர்த்திருக்கிறார்கள். பல கட்சி அரசியல் தலைவர்களை சாகாமல் பாதுகாத்து, என்றும் சாகாத பெயரெடுத்துக்கொண்ட அரியலூர், மற்றொரு துக்க சம்பவத்தில் மறக்கமுடியாத வகையில் பெயரெடுத்துவிட்டது.

கடந்த ஏழு நாட்களாக எந்தச் செய்தித்தாளைப் பிரித்துப் பார்த்தாலும் "அரியலூர் ரயில் விபத்து" மாண்டவர்—எண்ணிக்கை வளர்கிறது. இன்னும் இரண்டு பெட்டிகளைக் காணவில்லை. முடமாகிப் போனவர்கள், வகையோடு வாழ்வதற்கு தகுதியற்றவர்கள் ஏராளமாகத் தென்படுகிறார்கள்' என்று காணப்படும் செய்தி நம் நெஞ்சைத் துளைக்கிறது.

சென்னைத் துறைமுகத்தையும் தென்கோடியிலிருக்கும் தூத்துக்குடித் துறைமுகத்தையும் இணைக்கும் புகைவண்டித் தொடர் கவிழ்ந்துவிட்டது என்ற சோகச்செய்தி உண்மையிலேயே நடந்ததா அல்லது நாவல்களிலே படிக்கின்றோமா என்றுகூட எண்ணத் தோன்றுகிறது. அதிலே பிரயாணம் செய்து பழக்கப்பட்டவர்களுக்கு நம் சொந்த வீட்டிலே ஒரு ஆபத்து நேர்ந்துவிட்டதுபோல் எண்ண உணர்ச்சி ஏற்படுகிறது.

திருநெல்வேலி எக்ஸ்பிரஸ் போய்விட்டதா? இண்டோ சிலோன் எக்ஸ்பிரஸ் போய் விட்டதா? திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் போய்விட்டதா? இத்தனையையும் தவறவிட்டவர்களுக்கு, இதோ நான் இருக்கிறேன் என்று காத்திருந்து அழைத்துச் செல்லும் தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் கவிழ்ந்துவிட்டது என்றால் கலங்காத தமிழர்கள் இருக்கமாட்டார்கள். கொடுமை என்றால் கவலைப்பட்டு கசிந்து உருகி கையில் கிடைத்ததைக் காணிக்கையாகக் கொடுத்து கைதூக்கிவிட்ட பரம்பரை, தன் சொந்த நாட்டில் தங்களோடு தொடர்பு கொண்ட ஒரு எக்ஸ்பரஸ், கவிழ்ந்தது, கணக்கற்றோர் பலியானார்கள் என்றால் ஏன் கண்ணீர் வடிக்காது!

"சற்று முன்புதான் இதே பாலத்தில் திருநெல்வேலி எக்ஸ்பிரஸ் சென்றது. அதற்குக் கொஞ்சநேரம் முன்புதான் திருவனந்தபுரம் எக்ஸ்தரஸ் சென்றது. கடைசியாக தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் வந்தது' என்று எழுதத் தெரியாத தினசரிப் பத்திரிகைகள்கூட உருக்கமாக எழுதுவதைப் படிக்கிறபோது நம் கண்களில் நீர் துளிர்த்து நிற்கிறது. எத்தனையோ முறை தாங்கிப் பழக்கப்பட்ட அந்த மருதையாற்றுப் பாலம் கடந்த வெள்ளியன்று தனது சக்தியை இழந்துவிட்டது. இதுவரை இப்படியொரு விபத்து தென்னாட்டில் நேர்ந்ததில்லையென்று சொல்லுகிற அளவுக்கு தன் மடியிலே ஓடிய தண்ணீரை இரத்தமாக்கிக்கொண்டது மருதை ஆறு. வடநாட்டில் ஏற்பட்ட விமான விபத்துக்களைப் பார்த்து பெருமூச்சு விட்டோம். அண்மையில் நேர்ந்த மகபூப் ரயில் விபத்தைக் கேட்டு திகைத்துப் போனோம் எந்தமூலைக்கு அவையெல்லாம் என்று சொல்லும்படியாக அல்லவா தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் தவிடுபொடியாகிவிட்டது பயணம் செய்து பிணமானவர்கள் என்னென்ன எண்ணிக்கொண்டு சென்றார்களோ? எதையெதை முடிப்பதற்குப் புறப்பட்டார்களோ? இந்த ஒரே ஒரு ரயில் விபத்து உயிரோடு இருக்கின்ற எத்தனை தமிழ்க்குடும்பங்களைப் பாதிக்குமென்று நம்மால் சொல்லமுடியாது. சம்பாதிக்கக்கூடிய நடுத்தர வயதுள்ளவர்களுடைய சாவு அவர் குடும்பத்தை அலக்கழிக்கும். அன்புக்கும் பாசத்திற்கும் உரிமைப்பட்டவர்களுடைய சாவு அவர்களுக்காக வாழ்ந்தவர்களுடைய 'இதயங்களை சித்திரவதை செய்யும். எத்தனை குடும்பங்கள் இந்த அவதிக்கு ஆளாக காத்துக்கிடக்கின்றனவோ!

தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் கவிழ்ந்து, அதனால் பலர் மாண்டொழிந்ததைக் காட்டிலும் மிக மிக வருந்தத்தக்க செய்தி ஒன்று அங்கயே நடந்ததாக நாம் அறிகிறோம். அது தமிழகத்திற்கே பெருத்த கேவலமாகும். எரிந்த வீட்டில் எடுத்தவரை ஆதாயம் என்று எண்ணிய சில தமிழ்த் துரோகிகள் - கயமைத்தனத்தின் செல்லப்பிள்ளைகள், கண்யத்தோடு வாழத் தெரியாதவர்கள் செத்த பிணங்களுக்கு மத்தியிலே சிதறிக்கிடக்கும் நகைகளையும் - நாணயங்களையும் திருடிக்கொண்டு போனதாகச் சொல்லப்படுகிறது. ஆதாரத்தோடு கைது செய்யப்பட்டவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டியவர்கள். இரக்கமும் பச்சாதாபமும் இந்த இடத்தில் துளி அளவும் தலைகாட்டக்கூடாது. ஆபத்து வேளையில் அலறியடித்து ஓடிவந்து இயன்றதைச் செய்து, இன்னலைத் துடைக்கவேண்டியவர்கள் இழிசெயல் புரிந்தார்கள் என்றால் அவர்கள், எத்தகைய இளகிய மனத்தினராலும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே.

இன்னொன்று, தமிழகத்தின் தலைசிறந்த பேச்சாளர்களில் ஒருவராக மதிக்கப்படும் கே. எம். வல்லத்தரசு அவர்கள் தன்னுடைய தாயகத்தில் ஒரு பெரிய விபத்து ஏற்பட்டுவிட்டதென்று அறிந்து டெல்லி பாராளுமன்றத்தில் கண்ணீர் உகுத்துக் கொண்டே பேசியிருக்கிறார். அவர் கொண்டுவந்த அவசரப் பிரேரணை சபா நாயகரால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. பிரேரணை தள்ளுபடி செய்யப்பட்டதற்கு சரியான காரணம் சொல்லப்படவில்லை. பண்டித நேரு தயாராகயிருந்து, இன்னும் பூரண விபரம் தெரியவில்லை என்று சபாநாயகர் சொல்லியிருப்பது பொறுப்பற்ற பதிலாகும். பூரண விளக்கம் என்ன வேண்டிக் கிடக்கிறது! செத்தவர்கள் தொகை இன்னும் அதிகரிக்கலாமே தவிர, ரயில் விபத்து ஏற்படவில்லையென்று நிருபிக்கமுடியாதே. ஆனாலும் சபாநாயகர் பூரண விளக்கம் தேடுகிறார்! கவிழ்ந்தது தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் தானே? அவர்களுக்கு என்ன?

தமிழகம் இந்தக் கோரக் கொலையை சும்மா விடப்போவதில்லை. 20ம் தேதியே பாலங்களெல்லாம் கலகலத்திருக்கிறதென்று அதிகாரிகள் தெரிவித்தும் அதுபற்றி சம்பந்தப்பட்டவர்கள் கவலை எடுத்துக்கொள்ளாததின் விளைவுதான், தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் கவிழ்ந்தது - மருதை ஆறு மயானமாக மாறியது. ஏறத்தாழ இருநூறு தமிழர்களை பிணமாக்கி அவர்களது எண்ணங்களையெல்லாம் தகர்த்துவிட்டு, இதோ என் பதவியை துறக்கிறேன் என்று சொல்லுகிறார் லால்பகதூர் சாஸ்திரி. அவருடைய ராஜினாமா கடிதத்தையும் அதற்குப்பண்டித நேரு பதில் சொல்லியிருப்பதையும் பார்த்தால் உள்ளபடியே லால்பகதூர் ஜனநாயகத்தின் மேல் நம்பிக்கை வைத்து தன்னுடைய இலாகாவிலே கவனிப்பு இல்லாதகாரணத்தால் தான் பெரிய ஆபத்து நேர்ந்துவிட்டது என்பதற்காக அவர் ராஜினாமாச் செய்ததாகத் தெரியவில்லை. லால்பகதூர் சாஸ்திரியை பண்டிதநேரு ஒரு புதிய பதவிக்கு அனுப்புவதற்கு தக்க சமயம் பார்த்துக்கொண்டிருந்தது போலவும், அதற்கு இந்த தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் கவிழ்ந்ததைப் பயன்படுத்திக்கொள்ளப்போவது போலவும் நமக்குப் புரிகிறது. இதுவரையில் நடந்த டில்லி ராஜினாமாக்களில் தமிழரான ஆர். கே. சண்முகம் செட்டியாரின் ராஜினாமாவைத் தவிர வேறு எந்த ராஜினாமாவும் முறையோடு நடந்ததாகத் தெரியவில்லை. சாஸ்திரி மட்டும் எப்படி விதிவிலக்காகப் போகமுடியும்?

எந்தக் கூத்து டில்லியிலே எப்படி நடைபெற்றாலும் தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் கவிழ்ந்த துக்க சம்பவத்தை டில்லி மூலவர்கள் துச்சமென மதிப்பதற்கில்லை. நாட்டின் ஒரு கோடியிலே தலைநகரை வைத்துக்கொண்டு, அந்தக் கடைசியிலிருந்து இந்தக் கடைசியில் ஓடுகிற வண்டியைக் கண்காணிக்கும் இலாக்காவை தொடர்ந்து டில்லியிலே வைத்துக்கொண்டிருப்பதைத் தமிழர்கள் இனி அனுமதிக்கமாட்டார்கள். நமக்கென ஒரு தனி அரசு வேண்டாமென்று சொன்னவர்கள்கூட தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் விபத்துக்குப் பிறகு பெருமூச்சு விடுகிறார்கள். விபத்து என்றால் சாமான்யமா! சென்ற நவம்பர் கடைசியில் தமிழகம் சாவு வீடாக இருந்தது. நாடெல்லாம் வெள்ளம் – புயல் – சூறாவளி! இந்த நவம்பரில் தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் கவிழ்ந்தது.

தமிழர்களின் நெஞ்சத்துடிப்பு இன்னும் ஓயவில்லை. சிவந்த கண்கள் உலரவில்லை. சிந்தைகள் மருதை ஆற்றிலிருந்து மீளவில்லை. காலம் ஓடிக்கொண்டிருக்கிறது. அதிகாரிகள் பிணங்களை வலை போட்டுத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். தினம் தினம் எண்ணிக்கை ஏறிக்கொண்டு போகிறது. வட திசை பார்க்கிறோம். வாழ்ந்து கொண்டிருக்கும் டில்லியைக் கேட்கிறோம். யார் இதற்குப் பொறுப்பாளி? இதற்குச் சரியான தீர்ப்புக் கிடைக்கவேண்டும். வழக்கம்போல், விசாரணை என்பது ஒரு சம்பிரதாயத்துக்குத்தான் என்ற நிலைமையை, தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் கவிழ்ந்த சம்பவத்திலும் பின்பற்றினால், தமிழ்நாடு தமிழ்நாடுதான் என்று உணர்த்துகிற காலம் விரைவில் வந்துவிடுமென்று எச்சரிக்கிறோம்.

அதோடு, தூத்துக்குடி ரயில் விபத்தில் இறந்தவர்களின் தமிழ்க் குடும்பங்களுக்கு, நமது கண்ணீரைக் காணிக்கையாக்குகிறோம். அவர்களுடைய துக்கத்தைப் பகிர்ந்து கொள்ளுகிறோம். ★

முன் கதை-
இது இறுதிமுறை

194[illegible]-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஒருநாள். அன்றுதான் தியாகி தேசானந்தர் சிறையிலிருந்து விடுதலை பெற்றார். அவர் விடுதலை அடைந்த அந்த நாளில் வண்ணையம்பதியில் ஒரு பெரிய பொதுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில்தான் தியாகி தேசானந்தர் சொற்பொழிவாற்றினார். மக்கள் ஏக ஆரவாரம் செய்தனர்.

கூட்டம் முடிந்தது. அன்றைக்கே தேசானந்தர் தம் சொந்த ஊரான மேலூருக்குப் புறப்பட்டார். அவர் ஏறிய ரயிலிலேயே, அவரைத் தொடர்ந்து ஒரு பெண்; அவசர அவசரமாக ஏறிக்கொண்டாள். போர்ட்டர் அவளது பெட்டியைக் கொண்டுவந்து ரயில் பெட்டியில் வைத்துவிட்டுச் சென்றான். அந்தப் பெண்ணின் முகம் வெளிறி இருந்தது. அவள் உடம்பிலே இரத்தமே இல்லை. உட்காருவதற்கு இடமின்றித் தவித்தாள். தேசானந்தர் கொஞ்சம் விலகி உட்கார்ந்துகொண்டு அந்தப் பெண்ணுக்குச் சிறிது இடம் தந்தார்.

தேசானந்தர் அந்தப் பெண்ணுடன் உரையாட ஆரம்பித்தார். அந்தப் பெண்ணைப் பற்றிய விவரங்களை அவளிடமிருந்தே கிரகித்துக்கொண்டார். பின் அவர் தூங்கிவிட்டார். திருச்சியில் விழித்துப் பார்த்தபோது அந்தப் பெண்ணை வண்டியில் காணோம். அவளது பெட்டி மட்டும் இருந்தது. பெட்டியுடன் தன் வீட்டுக்கு வந்து சேர்ந்தார் அவர். அந்தப் பெட்டியைக் கண்ட அவரது மனைவி கோமளம் "அந்தப் பெட்டியில் என்ன இருக்கிறது?" என்று வினவினாள். தேசானந்தர் அந்தப் பெட்டியையும்-பெட்டி கொண்டுவந்த பெண்மணியையும்-அவள் அதனை ரயில் பெட்டியில் வைத்துச் சென்றுவிட்ட வரலாற்றையும் சொல்லிமுடித்தார். அத்துடன் அந்தப் பெண்ணின் கணவனது முகவரி தனக்குத் தெரியும் என்றும் அதை அவனிடம் திரும்பச் சேர்த்துவிடலாம் என்றும் சொன்னார். கணவனது பதிலை எதிர்பாராமலேயே பெட்டியைத் திறந்த கோமளம், 'ஆ' என்று அலறினாள். என்ன ஆச்சர்யம்? பெட்டிக்குள் ஒரு குழந்தை கிடந்தது. தேசானந்தர் திகைத்துவிட்டார். அதனருகில் கிடந்த கடிதத்தைப் பிரித்தார்; படித்தார்.

ரயிலில் அவர் சந்தித்த பெண்தான் அந்தக் கடிதத்தை எழுதியிருந்தாள், தேசபக்தர் சூடாமணியை நம்பித் தன் வாழ்வை வீணாக்கிக் கொண்ட வேதனை மிகுந்த வரலாற்றை அவள்கடிதத்தில் வரைந்திருந்தாள்.

கடிதத்தைப் படித்து முடித்தார். ரயிலில் அவர் சந்தித்த பெண் தன்னிடம் பொய் சொல்லியிருக்கிறாள் என்பதைத் தெரிந்துகொண்டார். பிறகு குழந்தையை ஒரு துண்டில் வைத்துச் சுற்றி, தோட்டத்தில் கொண்டு புதைத்தார். அன்று இரவே சென்னைக்குத் திரும்பிவிட எண்ணினார். அவரது மனைவி கோமளம் தடுத்துவிட்டாள்.

இரண்டு நாட்களுக்குப் பின்னர் தேசானந்தர் சென்னைக்குப் பயணமானார். காரைக்குடியில் ரயில் ஏறினார். அவர் ஏறியிருந்த பெட்டியில் ஒரு வாலிபனும் இருந்தான். அவனுடன் வேடிக்கையாகப் பேசிக்கொண்டே வந்தார் தேசானந்தர். வண்டி புதுக்கோட்டையில் வந்து நின்றது. ஒரு வாலிபனும், ஒரு இளம்பெண்ணும் தேசானந்தர் இருந்த பெட்டியில் ஏறினார். அவர்கள் இருவரும் பேசி மகிழ்ந்த விதத்தைப் பார்த்து அவர்கள் இளங்காதலர்கள் என்று நிச்சயம் செய்துகொண்டார் அவர். தேசானந்தர் அவர்களுடன் உரையாடிக்கொண்டே வந்தார். திருச்சிவந்தது. அந்தப் பெண்ணும் வாலிபனும் இறங்கினர். அந்தப் பெண் ஒரு நாடகக் காரிபோல் தோன்றினாள். அந்த வாலிபனை, அவள் 'சூடாமணி' என்றழைத்தாள். அதைக் கேட்டதும் தேசானந்தர் திடுக்கிட்டார். அவன்தான் சூடாமணி என்று அறிந்து தானும் வண்டியிலிருந்து கீழே இறங்கிவிட்டார். அதற்குள் அவர்கள் இருவரும் எங்கேயோ சென்றுவிட்டார்கள்.

தேசானந்தர் திருச்சி நகரம் முழுவதும் தேட நினைத்தார். ஒரு ஓட்டலில் தங்கினார். எதிர்பாராத விதமாக, சூடாமணியும், அந்த நாடகக்காரப் பெண்ணும் அவர் எடுத்துக்கொண்ட அறைக்கு அடுத்த அறையிலேயே தங்கியிருந்தனர். தேசானந்தர், சூடாமணியைச் சந்தித்தார்: சீதாவைப் பற்றி அவனிடம் பேசினார். அவளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் சொன்னார். அவனும் ஒப்புக் கொண்டான். அந்த நேரத்திலே எதிர்பாராத விதமாக சீதா அலங்காரத்தோடு ஒரு மைனருடன் வந்து கொண்டிருந்தாள். தேசானந்தர் ஆச்சரியப்பட்டார். 'சீதா' என்று அவளை அழைத்தார். அந்தப் பெண் திகைத்தாள். தான் சீதா அல்லவென்றும் தன் பெயர் மனோன்மணி என்றும் சொன்னாள். மேலும் அந்தப் பெண் சூடாமணியைக் கண்டு திகைப்படையவில்லை. இது, தேசானந்தருக்குக் குழப்பத்தைத் தந்தது. சீதாவுடன் வந்த மைனர் 'அறைக்குள் வாருங்கள்; பேசலாம்' என்றான். தேசானந்தர் சூடாமணியைக் கையோடு பிடித்துக்கொண்டு அந்த அறைக்குள் நுழைந்தார். அந்த நாடகக்காரி, அறையில் குழப்பத்தோடு உட்கார்ந்திருந்தாள்.

அறைக்குள் சென்ற தேசானந்தர் அமைதியோடு எல்லோரையும் விசாரித்தார். அந்தப் பெண்ணிடம் தான் அவளை ரயிலிலே சந்தித்ததை நினைவுபடுத்தினார். அப்போதுதான் அவளுக்கு விஷயம் புரிந்தது. அவள் பெயர் உண்மையிலேயே மனோன்மணிதானாம். தாய் மாமனையே மணந்துகொண்டாளாம். அவன் பெயர்தான் அருணாசலமாம். அவன் அவளைக் கவனிக்காமல் விரட்டிவிட்டானாம். அவள் கூட வந்த வாலிபன்தான் அவளை அதிகமாகக் காதலித்தானாம். அவளையே அவன் பதிவுத்திருமணம் செய்துகொள்ள விரும்பியதாகவும், சென்னையில் தெரிந்துகொள்வார்கள் என்றெண்ணித் திருச்சிக்கு மணமுடிக்க வந்துவிட்டதாகவும் சொன்னான். முதல் நாளே அந்த வாலிபன் திருச்சி வந்துவிட்டானாம். மறுநாள் அவள் வீட்டிலிருந்து பெட்டி நிறையப் பொருள்களுடன் வந்துவிட்டாளாம். ரயில் புறப்படச் சில நிமிடங்களே இருந்தமையால், அவசரமாக ஒரு போர்ட்டரைக் கூப்பிட்டுப் பெட்டியைத் தூக்கிவா என்று கூறிவிட்டு, ரயிலில் வந்து ஏறிக்கொண்டாளாம். அவனும் ஒரு பெட்டியைத் தூக்கிக்கொண்டு வந்து வைத்தானாம். அவளும், தன் பெட்டிதான் அது என்று எண்ணி அதற்குக் கூலியைக் கொடுத்து அனுப்பிவிட்டாளாம். விழுப்புரத்தைத் தாண்டி ரயில் வந்துகொண்டிருந்தபோது துண்டு எடுப்பதற்காகப் பெட்டியைத் திறந்தபோது பெட்டி பூட்டாமல் இருந்ததாம். பெட்டியைத் திறந்தபோது, செத்துப்போன குழந்தையொன்று கிடந்ததாம். அப்போதுதான் அது தன் பெட்டியல்ல என்பதை உணர்ந்தாளாம். பெட்டியை மூடிவைத்துவிட்டு திருச்சிக்கு முதல் ஸ்டேஷனிலேயே இறங்கிவிட்டாளாம்.

இதைக் கேட்டபின்தான் தேசானந்தரின் சந்தேகம் தீர்ந்தது. சூடாமணியை அழைத்தார். அந்த நாடகக்காரப் பெண்ணை அழைத்து வரும்படி சொன்னார். அவள் வந்தாள். அவள் கையிலே பத்து ரூபாய் கொடுத்து. 'இனிமேலாவது கௌரவத்தோடு வாழ்" என்று சொல்லி அனுப்பிவிட்டார். அவளும் சென்றுவிட்டாள். அதன்பின் அவர் சூடாமணிக்கு அறிவுரை கூறினார். இன்னும் நான்கு நாளில் தான் சென்னைக்கு வருவதாகவும், அங்கே சூடாமணியைச் சந்திப்பதாகவும் சொல்லி, அவனது முகவரியை வாங்கிக்கொண்டார். அன்றிரவே மேலூருக்குப் புறப்பட்டார். சூடாமணி சென்னைக்குப் புறப்பட்டான். இரவு ஒரு மணிக்குத்தான் தேசானந்தர் மேலூர் வந்து சேர்ந்தார். வந்த அசதியில் பெட்டியை வைத்துவிட்டு தூங்கிவிட்டார். காலை எட்டு மணி இருக்கும். திடீரென்று அவரது மனைவி கோமளம் ஒரு செய்தியைச் சொல்லி அவரை எழுப்பினாள். என்ன ஆச்சரியம்? அவரது பெட்டிக்குப் பதிலாக வேறு பெட்டி அங்கே இருந்தது.

அந்தப் பெட்டிக்குள் ரூபாய் நோட்டுக்கள் இருந்தன. தேசானந்தர் பெட்டியைத் தூக்கிக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனார். அங்கே கள்ள நோட்டு அடித்ததாக மாசிலாமணி செட்டியார்மகன் மாணிக்கம் கைது செய்யப்பட்டதாக செய்தி கிடைத்தது; அந்தச் செய்தியை கோமளத்திடம் சொன்னார் தேசானந்தர். செய்தி கேட்ட அவரது தங்கை சரசு துடித்தாள். பிறகு,

சரசாவின் காதலனான மாணிக்கத்தை ஜாமீனில் எடுத்துவர சென்னைக்குச் சென்றார் தேசானந்தர். அங்கே, 'சீதா நடிக்கும் சிதைந்த வாழ்வு' என்று ஒரு நாடக விளம்பரத்தைப் பார்த்தார். அந்த நாடகத்திற்குப் போனார். அதே சீதாதானா அவள்? இல்லை! தேசானந்தர் ஏமாந்தார். ★

9

தேசானந்தரின் உடல் முழு பலங்கொண்டு ஆடியது. பட்டுப்போன ஒரு பெண்ணின் வாழ்க்கை மேடையில், பழைய காட்சிகளைத் திரையிட்டுக் காட்டும்போது பெருக்கெடுக்கும் உணர்ச்சி வெள்ளத்தை, தேசானந்தரின் மேனி பிரதிபலித்தது. 'மைக்' அவர் கையிலிருந்தது; வார்த்தைகள் உணர்ச்சி வசத்தில் தடுமாறின, ஆயினும் அவர் தளரவில்லை. பேசினார். பேசினாரா! —மழை பொழிந்தார்:

"பெரியோர்களே, மகாஜனங்களே! ஒரு பெண்......பெண்ணென்றால் என்ன!..பொருளா? இல்லை பொருளில்லை. பெண் என்பது உயிருள்ளது...அதாவது நாம் மதிக்கவேண்டியது... அந்தப் பெண் சீரழியலாமா? கூடாது. ஆணவம் பிடித்த மனித சாதி, பெண்ணை அவமானப்படுத்துகிறது. சகிக்கலாமா? ஆணும் பெண்ணும் ஒன்று... அதாவது உடலில் வேறானாலும்...பொதுவாக....விஷயத்தில் அதாவது......நினைப்பதில். உணர்ச்சியில் ஒன்று! ஆண் மட்டும் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாமா? பெண்ணை ஆண் அவமானப்படுத்தலாமா? கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன் என்கிறான்; கைவிட்டுப் போகிறான்! அக்ரமக்காரன்! சுடவேண்டும்!"

—தேசானந்தர் பேசப் பேச சபையில் குழப்பம் ஆரம்பித்தது. முதலில் தேசானந்தரை வரவேற்றவர்கள் கூட, விழிக்க ஆரம்பித்தனர். நடிகர்கள் அசந்து போய் நின்றனர். அவர் விடவில்லை.

"காந்திஜி சொல்லியிருக்கிறார்; பெண்ணை நாம் மதிக்கவேண்டும். நாமே மதிக்கவில்லையென்றால், வேறு யார் மதிப்பார்கள்? கொண்டவன், "நாயே!" என்றால், வந்தவன், "பேயே!" என்பான். இந்தக் கதையை நீங்கள் பார்க்கிறீர்கள். இந்தக் கதையில் எனக்குச் சம்பந்தமுண்டு......"

—சபை சலசலத்தது! தேசானந்தர் தொடர்ந்தார்.

"ரயிலிலே எனக்கு ஒரு பெட்டி கிடைத்தது. அதில் குழந்தை இருந்தது. முன்பெல்லாம் பெண்கள் மட்டும்தான் பிரசவிப்பார்கள். இப்பொழுது பெட்டியெல்லாம் பிரசவிக்கிறது......"

—அவர் நகைச்சுவையைக் கூடச் சிந்தினார். சபை சப்தமின்றிக் கவனித்தது.

"அந்தக் குழந்தையின் தாய், அதில் ஒரு கடுதாசி வைத்திருந்தாள். அதில் இந்தக் கதை அப்படியே இருந்தது...இடையில் நான் பேசுவதற்குக் காரணம், என்னால் பொறுக்க முடியவில்லை!"

—என்று தேசானந்தர் நிறுத்தினாரோ இல்லையோ, சபையிலிருந்து ஒருவன், "எங்களாலும் பொறுக்க முடியவில்லை! நீர் போய் இடத்தில் உட்காரும்!" என்று கத்தினான்.

சபை சிரித்தது. "சரி, பிறகு பேசிக் கொள்கிறேன்." என்று கூறிய தேசானந்தர் மைக்கைக் கீழே வைத்துவிட்டு இடத்தில் போய் அமர்ந்தார். சபை முழுக்க அவரை ஒரு பைத்தியமென்றே நினைத்தது. பிறகு நாடகம் தொடர்ந்து நடந்து முடிந்தது.

தேசானந்தர் எழுந்து நடிகர்கள் பவுடர் அடிக்கும் இடத்திற்குச் சென்றார். அங்கே பவுடரை அழித்துக் கொண்டிருந்த நடிகர்கள் தேசானந்தரைக் கண்டதும் கேலியாகச் சிரித்துக் கொண்டார்கள். அவர் அதை இலட்சியம் செய்யாமல் "சீதா எங்கே" என்று கேட்டார். எல்லோரும் வாய்விட்டே சிரித்தார்கள். ஒரு பையன் அவரிடம் பரிதாபப்பட்டு நாடகக் கம்பெனி மானேஜரிடமே அழைத்துச் சென்றான். தேசானந்தர் அந்த மானேஜரிடம் விபரம் முழுவதையும் சொல்லி சீதாவைப்பற்றி விசாரித்தார். மானேஜரும் முழுக்கக் கேட்டுக்கொண்டு இருந்துவிட்டு, "அதே சீதாவின் கதைதான் இதுவும். ஆனால் அந்தச் சீதா நான்கு நாட்களுக்குமுன் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் கம்பெனியிலிருந்து வெளியேறி விட்டாள். இப்போது நடிப்பது புது முகம் சீதா. அந்த சீதா நாடகத்தில் ரொம்ப நல்ல பெயர் வாங்கினாள். அவளுக்கென்றே கூட்டம் வந்தது. இப்போது நடிப்பவளுக்கும் அதே பெயர்தான் என்றாலும் ஜனங்கள் அவ்வளவாகத் திருப்திப் படவில்லை. முதல்நாள் ஏக கலாட்டா! எப்படியோ சமாளித்தோம்" என்று தன் நாடகக் கம்பெனிக் கதைகளைத் தொடங்கினான்.

தேசானந்தர் இடை மறித்து, "அந்த சீதா எங்கு சென்றாள்?" என்று விசாரித்தார்,

"போன இடத்தைச் சொல்லி விட்டா போனாள்? திடீரென்று போய் விட்டாள்," என்றார் மானேஜர்.

தன் முயற்சி தோற்றது கண்டு வருந்தி தேசானந்தர் விடைபெற்றுக்கொண்டு திரும்பினார். சீதையைக் கண்டுபிடிக்க ராமன் பட்ட கஷ்டத்தைக் காட்டிலும் சீதாவைக் கண்டுபிடிக்க அவர் படும் கஷ்டம் அதிகமாகவே இருந்தது.

பழையபடியும் ஓட்டல்ரூமுக்கு வந்து சேர்ந்தார் தேசானந்தர். சீதாவைக் கண்டுபிடிப்பதைக் கொஞ்சம் நிறுத்திக்கொண்டு வந்த வேலையைக் கவனிக்க ஆரம்பித்தார். கோர்ட்டுக்கும் ஓட்டலுக்குமாக அலைந்து தவித்து கடைசியில் ஒரு வழியாக மாணிக்கத்தை ஜாமீனில் விடுதலை செய்து கொண்டு மேலூர் திரும்பினார்.

மேலூருக்கு வந்ததும் அவருக்கு நிம்மதியில்லை. சீதாவைக் கண்டுபிடிக்கும் கடமை முழுக்க முழுக்கத் தன்னிடமே ஒப்படைக்கப் பட்டிருப்பதாக நம்பி படாத பாடுபட்டார். இந்த நிலையில் திடீரென்று அவருக்கொரு தபால் கிடைத்தது. அது சூடாமணியிடமிருந்து வந்தது. தான் சீதாவைக் கண்டுபிடித்து விட்டதாகவும், அவளை மணமுடித்துக் கொள்ளப் போவதாகவும், அந்த மணத்திற்குத் தேசானந்தரே தலைமை வகிக்க வேண்டுமென்றும் அதில் கண்டிருந்தது. கடிதத்தைப் படித்ததும் தேசானந்தரின் மூச்சு கொஞ்சநேரம் நின்றது. பிறகு வழக்கம்போல் வந்தது. உற்சாக வெள்ளத்தில் அவர் மிதந்தார். மறுநாளே திரும்பவும் சென்னைக்குப் புறப்படுகிற பணியை ஏற்றுக் கொண்டார். தேசானந்தரின் மனைவி கோமளம் அவரைத் தடுத்து எவ்வளவோ மன்றாடினாள். எதுவும் அவர் காதில் ஏறவில்லை. அவர் பழையபடியும் சென்னை புறப்பட்டார்.

சென்னையில் சூடாமணியின் வீட்டைத் தேடிக் கண்டுபிடித்தார். சூடாமணியைச் சந்தித்துக் கைகுலுக்கினார். அவன் செய்யப் போகும் துணிச்சலான காரியத்துக்காக அவனைப் பாராட்டினார். அவர் சொன்னார்:

"உன்னைப் போன்ற தைரியசாலிகள் உலகத்தில் மிகக் குறைவு. நான் எடுத்துக் கொண்ட முயற்சி வெற்றிகரமாக நிறைவேறுவதற்காக என்னை நானே பாராட்டிக்கொள்கிறேன். உன் சீரிய குணத்தை நாடு முழுவதும் தெரிவிப்பேன். போகிற இடமெல்லாம் உன்னைப் பற்றியே பேசுவேன். மனிதன் தவறு செய்யக் கூடியவன் தான். ஆனால் தவறைத் திருத்திக் கொள்ளும்போது அவனே பெரிய மனிதனாகி விடுகிறான். நீ இனிப் பெரிய மனிதன் தான்."

—தேசானந்தர் பேசப் பேசச் சூடாமணியின் முகம் மலர்ந்தது. கடைசியில் சூடாமணி தன்னுடைய உறவினர்களில் ஒருவரின் வீட்டில் சீதாவைத் தங்க வைத்திருப்பதாகவும், போய்ப் பார்த்து வரலாமென்றும் தேசானந்தரை அழைத்துக்கொண்டு புறப்பட்டான்.

போகும் வழியிலெல்லாம் தேசானந்தர் அவனைத் தட்டிக் கொடுத்து பலபடப் புகழ்ந்து கொண்டே வந்தார். உறவினர் வீடும் வந்தது. இருவரும் இறங்கி உள்ளே சென்றார்கள். ஒரு கட்டிலில் அமர்ந்தார்கள். காபி வந்தது. குடித்தார்கள் "சீதா! சீதா" என்று அழைத்தான் சூடாமணி.

"இதோ வந்துவிட்டேன்!" என்ற குரல் உள்ளே இருந்து கேட்டது. தேசானந்தர் வைத்த கண் வாங்காமல் அவள் வரப் போகும் வழியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

திடீரென்று அளவுக்கு அதிகமான அலங்காரங்களோடு ஒரு பெண் அவர் முன்னால் தோன்றினாள். அந்தப் பெண்ணைப் பார்த்ததும் தேசானந்தரின் மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. நாடகத்தில் அவர் பார்த்த பெண்ணே அவள். அவள் 'ஒரிஜினல் சீதா' அல்ல என்று நாடக மானேஜர் சொன்னாரே...'— அவர் தலை சுற்றியது.

(தொடரும்)

ஏஜண்டுத் தோழர்களுக்கு முக்கிய வேண்டுகோள்!

'தென்ற'லின் சென்ற நிர்வாகத்தில், ஜி. நாகராஜன் என்பவரின் கையெழுத்திட்டு, ஏஜண்டுத் தோழர்களுக்கு வந்திருக்கும் மணியார்டர் கூபன்கள், ரசீதுகள், பில்கள் முதலியவற்றை மறு தபாலில் அனுப்பி வைக்கக் கோருகிறோம். தென்றலின் பழைய கணக்குக்கும் புதிய கணக்குக்கும் வித்தியாசம் இருப்பதாக எழுதியவர்கள், நினைப்பவர்கள் உடன் முழு விபரமும் அனுப்பக் கோருகிறோம். அவசரம்!

நிர்வாகி, 'தென்றல்'

"விக்டோரியா" விடுதியில்!

சென்னை, நவ 27. சென்னை மாநிலக் கல்லூரியைச் சேர்ந்த விக்டோரியா உணவுவிடுதியில், மாணவர்கள் கேடிகளைப் போல் நடத்தப்படுகின்றனர். ஹாஸ்டல் கண்காணிப்பாளரு (வார்டன்)ம் தமிழ்நாடு காங்கிரசின் துணைத்தலைவரான வெங்கடகிருஷ்ண ரெட்டியாரின் மருமகனுமான ராமச்சந்திரன் என்பாரின் தான் நினைத்த போக்கு, மாணவர்களிடையே பெருத்த அதிர்ப்தியை உருவாக்கி இருக்கிறது.

1. இரவு மணி 9-க்கு மேல் 10-க்குள் மாணவர்கள் கையெழுத்துப் போடவேண்டும்.
2. உணவு விடுதியில் ஏற்கனவே இருந்த காபிக் கடையில் காபி இல்லாது செய்தது.
3. இரவில் சாப்பாடு 8-30 மணிக்கு மேல் இருக்காது.
4. ஒவ்வொரு மாதமும் 15-ம் தேதிக்குள் உணவு விடுதிப் பணம் கட்டிவிட வேண்டும்.

—நிர்வாகஸ்தர்களின் இந்தநான்கு நிபந்தனைகளையும் மாணவர்கள் முழுமூச்சோடு எதிர்க்கிறார்கள். இந்த ஆண்டில் புதிதாகத் திணிக்கப்பட்ட இந்த விதிகளை ரத்து செய்ய வேண்டுமென்று மாணவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள். இரவு 9-மணிக்கு மேல் மாணவர்கள் தங்கள்தங்கள் அறைகளில் இருக்கிறார்களா இல்லையா என்பதை நிர்வாகஸ்தர்கள் நேரடியாகக் கண்காணித்துக் கொள்ளட்டும் என்று அவர்கள் சொல்வதை நிர்வாகஸ்தர் ஏற்றுக் கொள்ளாமல், கையெழுத்துப் போட்டுத்தான் தீர வேண்டும் என்பது, நிர்வாகஸ்தர்கள் மாணவர்களை அவமதிக்கிறார்கள் என்பதையே காட்டுகிறது.

முதலிலே கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட நிர்வாகஸ்தர்கள், ஒருவருக்கும் தெரியாமல் மாணவர்களின் பெற்றோர்களுக்கு, அவர்களது பிள்ளைகளைப் பற்றி அவதூறாக எழுதியது உண்மையானால் அது வருந்தத் தக்கதாகும். நிலைமை முற்றி, நிர்வாகஸ்தர்கள் தங்கள் செய்த தவறுக்குப் போலீஸ் துணை வேண்டும் என்று எண்ணும் அளவுக்கு சூழ்நிலை வளர்ந்துவிட்டது. போலீஸ் என்றால் என்ன? மாணவர்களைப் பற்றி அவர்களுக்குத் தெரியாதா என்ன! போலீசார் நிலையை அறிந்து சிறிது நேரத்தில் வெளியேறி விட்டனர்.

செவ்வால் காலை நிதி அமைச்சர் சுப்ரமணியம் விடுதிக்கு வந்தார். வழக்கம் போல் குறைகளைத் தீர்ப்பதாக உறுதி தந்து போயிருக்கிறார்.

மாணவர்களின் கோரிக்கைகள் கவனிக்கப்படாது போனால் மாணவர்கள் ஒற்றுமையாக இருந்து 'ஸ்ட்ரைக்' செய்யப் போவதாகச் சொல்லப்படுகிறது.

தலைமைக் கழகம் : அறிக்கை – 9-56

ஒழுங்கு நடவடிக்கை

கழகத்தின் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் புறக்கணிக்கும் வகையிலும், தலைமைக் கழகத்தை அவமதிக்கும் வகையிலும், தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ள சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இளம்பரிதி, சென்னை 43-வது வட்டக்கிளைச் செயலாளர் தோழர் மு புரட்சிமணி ஆகிய இருவர் மீதும், **43-வது** வட்ட தி. மு. க. கிளையின் மீதும் கீழ்க்கண்டவாறு ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருப்பதற்கான காரண விளக்கங்கள் முறைப்படி சென்னை மாவட்டக் கழகக் கூட்டத்திலும் பொதுக் குழுக் கூட்டத்திலும் அறிவிக்கப்படும்-

1. தோழர் இளம்பரிதி அவர்கள் 23-11-56 முதல் 22-11-59 வரையில், மூன்றாண்டு காலத்திற்குக் கழகத்தில் சாதாரண பொது உறுப்பினராயிருப்பதைத் தவிர, தி. மு. கழகத்தின் எந்த ஒரு கிளையிலோ அல்லது மாவட்டக் கழகத்திலோ, அல்லது துணை அமைப்புகளிலோ நிர்வாகியாகவோ அல்லது செயற்குழு உறுப்பினராகவோ இருப்பதற்கும், மாவட்டப் பிரதிநிதியாகவோ அல்லது பொதுக்குழு உறுப்பினராகவோ இருப்பதற்கும் அறவே உரிமை இல்லை என்று முடிவு செய்யப்படுவதோடு, கழகத்தின் சார்பாகவோ அல்லது துணை அமைப்புகளின் சார்பாகவோ நடைபெறும் எந்த ஒரு நிகழ்ச்சியிலும் பொறுப்பு ஏற்கவோ அல்லது சொற்பொழிவு ஆற்றவோ அறவே உரிமை இல்லை என்று முடிவு செய்யப்பட்டு, அதன்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

2. தோழர் மு. புரட்சிமணி அவர்கள் 23-11-56 முதல் 22-11-58 வரை இரண்டாண்டு காலத்திற்குக் கழகத்தில் சாதாரண பொது உறுப்பினராயிருப்பதைத் தவிர. தி. மு. கழகத்தின் எந்த ஒரு கிளையிலோ அல்லது மாவட்டக் கழகத்திலோ, அல்லது தலைமைக் கழகத்திலோ துணை அமைப்புகளிலோ, நிர்வாகியாகவோ, அல்லது செயற்குழு உறுப்பினராகவோ இருப்பதற்கும், மாவட்டப் பிரதிநிதியாகவோ அல்லது பொதுக்குழு உறுப்பினராகவோ இருப்பதற்கும் அறவே உரிமை இல்லை என்று முடிவு செய்யப்படுவதோடு, கழகத்தின் சார்பாகவோ அல்லது துணை அமைப்புகளின் சார்பாகவோ நடைபெறும் எந்த ஒரு நிகழ்ச்சியிலும் பொறுப்பு ஏற்கவோ அல்லது சொற்பொழிவு ஆற்றவோ அறவே உரிமை இல்லை என்றும் முடிவு செய்யப்பட்டு, அதன்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

3. சென்னை 43-வது வட்டத் தி. மு. கழகக் கிளை 23-11-56 முதல் தலைமைக் கழகத்தின் மறு அறிக்கை வெளிவரும் வரையில் கலைக்கப்படுகிறதென்று முடிவு செய்யப்பட்டு அதன்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. (தலைமைக் கழகத்தின் உத்தரவுப்படி மறு தேர்தல் நடைபெறும் வரையில் 43-வது வட்டத்திலுள்ள கழக உறுப்பினர்கள் அனைவரும் சாதாரண பொது உறுப்பினர்களாகவே இருந்து வருவார்கள்).

குறிப்பு :—சென்னை மாவட்டத்தின் புதிய செயலாளர், பொதுக் குழு உறுப்பினர் ஆகியோர் தேர்வு நடைபெறுவதற்கான நாள் விரைவில் அறிவிக்கப்படும்.

‘அறிவகம்’
சென்னை-13
23-11-56.

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச் செயலாளர், தி. மு. கழகம்.

போன் No- 226.

ஷேக் ஷூ மார்ட்,
பழனி.

பிளக்ஸ் & பாட்டா ஏஜண்ட்

கை தேர்ந்த ஆட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் மிகச் சிறந்த மிதியடிகளும், ஷூஸ்களும், கவர்ச்சியூட்டும் டிசைன்களில் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

கேட்டீர்கள் ! வந்துவிட்டது !

புத்தக வடிவில் ! அழகிய முகப்புடன் !

இலக்கியக் களஞ்சியம் !
நூற்றுக்கணக்கான கவிஞர்களின்
மணிமாலை !

—இந்த நூல் எங்கே இருக்கிறதோ
அங்குதான் தமிழ் வாழ்கிறது !

தென்றல் வெண்பா

1000 வெண்பாக்கள் !

புலவர்கள் பலரது முன்னுரை !

கண்ணதாசன் எழுதிய “இன்ப வெள்ள”த்தோடு !

புகழேந்தியின் பரம்பரையினர் எத்தனை பேர் ?—இது சொல்கிறது !

கவிஞர்களின் பெயர்கள், அகரவரிசையில் !

தென்றலின் சுவைத்தீர்கள் !
திரட்டித் தந்துள்ளோம்,
புத்தக வடிவில் !

அரிய முயற்சி ! நூலுக்கு முந்துக !

காலிகோ பைண்ட்
விலை ரூ. 2

சாதா பதிப்பு
விலை ரூ. 1-8-0

★ தென்றல் ஏஜண்டுகளுக்கு, முப்பது சதவிகிதம் கழிவு உண்டு. தபால் செலவு தனி.

★ தனி நூலுக்கு இரண்டு ரூபாய்கள் அனுப்ப வேண்டும். தபால் செலவு - பதிப்பகத்தைச் சார்ந்தது.

எழுதுக

கண்ணதாசன் பதிப்பகம்,
2-127, மவுண்ட் ரோடு : : சென்னை-6.

அங்கேரியும் ரஷ்யாவும்

— 4-ம் பக்கத் தொடர்ச்சி —

ணம் இம்ரேநாகி தனது ரேடியோப் பிரசங்கம் ஒன்றில், தான் ஒன்றும், ரஷ்யத் துருப்புகளை அழைக்கவில்லை என்றும், தனக்கு முன்னால் இருந்த "கெரோ" என்ற பிரதமர் தான் அழைத்ததாகவும் கூறியிருக்கிறார். இதை யுகோஸ்லேவியாவும் உறுதிப்படுத்தியுள்ளது. அப்படியிருக்க "இம்ரேநாகி"யின் அழைப்பின் பேரில் தலையிட்டதாக ரஷ்யா கூறும் வாதம் யோசித்து முடிவுகட்ட வேண்டியதாகும்.

ஐ. நா. சபைக்கு நாகியின் அபயக் குரல் எட்டிய பிறகு ரஷ்யா புதிய காரணங்களும், விளக்கங்களும் கூற ஆரம்பித்தது. அதாவது அமெரிக்க, பிரிட்டிஷ் தூண்டுதல் காரணமாக, ஏராளமான பாசிஸ்டுகள், ஆயுதங்களோடு அங்கேரியில் நுழைந்து போரிட்டதாகவும், பாசிஸ்டுகள் கை ஓங்காவண்ணம் தடுக்கவே, தான் இன்னமும் நீடித்துப் போரிடுவதாகவும் கூறியது. இப்படிக் காரணம் கூறிக்கொண்டே "இம்ரேநாகி" சர்க்காரைக் கவிழ்த்துவிட்டு, நாகி சர்க்காரில் ஒரு மந்திரியாக இருந்த "ஜனோஸ் காதர்" என்பவரை பிரதமராக்கியது.

முதலில், அங்கேரியில் நடந்த இயக்கம் பாசிஸ்ட் இயக்கமா என்பதைப் பார்ப்போம். இதற்காக "ஜனோஸ்காதர்" சர்க்கார் வெளியிட்டுள்ள அறிக்கையின் சில பகுதிகளை எடுத்துக் கூறுகிறோம்.

"நகோசியாவும் அவருடைய கூட்டாளிகளாலும், இழைக்கப்பட்ட கட்சி விரோத, தேச விரோதத் தவறுகளைத் திருத்தும், சிறந்த நோக்கத்துடனும், தேசிய சுதந்திரத்தையும் அரசுரிமையையும் பாதுகாக்கும் சிரேஷ்டமான குறிக்கோளுடனும், அக்டோபர் 23-ந்தேதி இந்நாட்டில் வெகுஜன இயக்கம் ஆரம்பமாகியது......—

"முக்கியமாக, ஏராளமான இளைஞர்களை தேசத்தின் மீதுள்ள உண்மையான வாஞ்சையின் காரணமாய், இந்த இயக்கத்தில் சேர்ந்து கொண்ட இளைஞர்களை அவர்களைத் தவறான வழியை மேற்கொள்ளும்படிச் செய்துவிட்டனர். நம் நாட்டின் சோஷலிச அடித்தளங்களை வலிமையுறச் செய்யும் வகையில், நம்முடைய சமூக, பொருளாதார அரசியல் வாழ்க்கை முழுவதையுமே மேலும்ஜனநாயகமாக்க வேண்டுமென மக்கள் கிளர்ந்தெழுந்தார்கள். இதர சோஷலிச நாடுகளுடன் நட்புறவு கொண்டு, பூரண அரசுரிமையுடைய சுதந்திர தேசமாக அங்கேரி வளர்ந்து ஓங்க வேண்டுமென இம்மக்கள் கோருகிறார்கள். எனவே இவர்கள் இந்த இயக்கத்தில் சேர்ந்து கொண்டதற்காக இவர்களைக் குற்றவாளிகளெனக் கருதுவது சரியல்ல, என்பதுடன் மிகப் பெரிய அநீதியு மாகும்." (ஜனசக்தி 10-11-56 இதழ்) என்று குறிப்பிடுகிறது. இதிலிருந்து நமக்குத் தெரிவது கிளர்ச்சி உண்மையிலேயே நல்ல நோக்கத்தோடும், அந்நாட்டு மக்கள் பெரும்பாலோரின் ஆதரவுடனும், நடத்தப்பட்டது என்பது ருசுவாகிறது.

இந்த நேரத்தை சில பிற்போக்கு வாதிகள் பயன்படுத்திக் கொண்டு இருந்திருக்கலாம். அதற்காக இதை முழுக்க முழுக்க பாஸிஸ்ட் இயக்கம் என்று கூறிவிடுவது தவறானதாகும். முற்போக்கு, பிற்போக்கு என்ற வார்த்தைகளை வைத்துக்கொண்டு சிறுபிள்ளைகளைப் போல அதையே திருப்பித் திருப்பி சொல்லிவிடுவதால் கம்யூனிஸ்ட்கள் புத்திசாலிகளாகிவிட மாட்டார்கள். ஒரு இயக்கம் நாட்டில் உருவாகிறது என்றால் அதன் உள்ளடக்கம், உருவம், இவற்றை வைத்துத்தான், முற்போக்கு, பிற்போக்கு இவற்றை நிர்ணயிக்க வேண்டும். அப்படிப் பார்க்கப்போனால், அங்கேரியின் நடைபெற்ற மக்கள் இயக்கத்தின் கோரிக்கைகளாக விளங்கியவைகள் கீழ்க் கண்டவைகள் தான்.

1. ரஷ்ய ஆதிக்கத்தினின்று விடுபடவேண்டும்.

2. தங்கள் நாட்டிற்கேற்ப, சோஷலிசப் பாதை அமைய வேண்டும்.

3. மக்களுக்கு ஜனநாயக உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

4. வாழ்க்கை நிலை உயர்த்தப்பட வேண்டும்.

—என்பவைகள்தான்.

இந்தக் கோரிக்கைகளில் எதிலும்-பாசிஸம் காணப்படவில்லை. சாதாரண மக்கள் அபிலாஷைகளாகத்தான் காணப்படுகின்றன. இந்த கோரிக்கைகளுக்காகக் போராடியவர்கள். அமெரிக்கர்களோ, பிரிட்டிஷ்காரர்களோ அல்ல. அங்கேரிய நாட்டு மாணவர்கள், தொழிலாளர்கள், ராணுவ வீரர்கள் ஆகிய மிகப் பெரும்பான்மையான மக்கள் தான் போராடினார்கள். ரஷ்ய ஆதிக்கத்திலிருந்து, தன்னாடு விடுபடுவதும், ஜனநாயக உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று கோருவதும்தான் பாசிசம் என்று ரஷ்யர்கள் கருதுவார்களே ஆனால்அந்தப் பாசிசம் நீடூழி வாழ்க என நாமும் வாழ்த்துகிறோம். அந்நாட்டு மக்கள் இப்படிப்பட்ட பாசிசம் தான் வேண்டும் என்று விரும்பினால், அதைத் தடுக்க ரஷ்யர்கள் யார் என்றுதான் உலகப் பெரு

— 10-ம் பக்கம் —

"வாய்வு சூரணம்"

உஷ்ணவாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்புவாய்வு, பித்தவாய்வு, மலக்கட்டு, மலமந்தம், அஜீரணம், புளியேப்பம், கைகால் அசதி - பிடிப்பு பசியின்மை, செறியாமை, வயிற்றுவலி, பித்தமயக்கம், பித்தசூலை, சோம்பல், முதலான வாய்வு ரோகங்களை அறவே நீக்கி, நல்ல பசி எடுப்பதற்கும் தேகாரோக்கியத்திற்கும் மிகச் சிறந்த சூரணம், மூலிகைகளினால் தயாரிக்கப் பெற்றது.

ஆண் - பெண் யாவரும் உபயோகிக்கக் கூடியது. (பத்தியமில்லை).

5-பலம் டின் 1-க்கு ரூ. 3-0-0.

சம்பு இண்டஸ்ட்ரீஸ்,
சேலம்-2.

மதுரையில் 'தென்றல்'

இதுவரை மதுரையில் நமது 'தென்றல்' விற்பனையாளராக இருந்து வந்தவர் நீக்கப்பட்டு, புது விற்பனையாளர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

முகவரி :

மேஜாரா நியூஸ் ஏஜன்ஸி,
ஜடாமுனி கோயில் தெரு,
மதுரை.

மதுரைத் தோழர்கள் இனி புது விற்பனையாளர் மூலம் பிரதிகள் பெற்றுக் கொள்ளலாம்.

நிர்வாகி.

முத்து சவுண்ட் சர்வீஸ்,

கீழராஜ வீதி,
புதுக்கோட்டை.

கல்யாண காலங்களில் எல்லோரையும் மகிழ்விப்பது ஒலிபெருக்கி. அதற்கேற்றவாறு ஒலிபெருக்கி சகாயமாக அமைத்துத் தரப்படும்.

உரிமையாளர்,
இராம. முத்துக்கருப்பன்.

அறிவிப்பு

பிரபல ஓவியர்களான பாலு பிரதர்ஸ், அய்க்கன், மாதவன்—கைத்திறன் கொண்டு தயாரித்த "பொங்கல் வாழ்த்துகள்" விற்பனைக்குத்தயார். மாதிரிதேவைப்படுவோர் (15 டிசைன்கள் கொண்ட செட்) ரூ. 1. M. O. செய்யவும்.

பகுத்தறிவுப் பண்ணை
115, வண்டிக்காரத் தெரு,
தஞ்சை.

பழநி, ஆர். எம். கே. வேலுசுவாமி
சித்த வைத்தியசாலை.

56 வருட அனுபவம் பெற்றது.

தீராத கொடிய வியாதிகளையெல்லாம் தீர்த்து பல்லாயிரக்கணக்கான நற்சாட்சிகள் பெற்று இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நிகரில்லாப் புகழ் பெற்றது.

பெண்களுக்கு ஓர் வரப்பிரசாதம்.

சூதக சம்பந்தமான சகல குற்றங்களும் நீங்கி புத்திர சந்தானம் உண்டாக பழநி ஆர். எம். கே. கெர்ப்ப சஞ்சீவி எண்ணெய் சாப்பிடுங்கள்.

பெண்களுக்கு மாதாந்திரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்றுவலியை அந்த க்ஷணமே தீர்க்கும். எந்த மருந்திலும் தீராத எவ்வளவு நாட்பட்ட சூதக வயிற்றுவலியும், சூதக சிக்கலும் இதில் அவசியம் தீரும். காலாகாலத்தில கிரமப்படி பஹிஷ்டையாகும். கெர்ப்பப் பையிலுள்ள 6-வித குற்றமும் தீர்ந்து கெர்ப்ப உற்பத்தியை உண்டுபண்ணும். அனுபவத்தில் கைகண்டது. சூதகவயிற்றுவலி இருக்கும் வரை கெர்ப்பம் தரிக்காது. மேற்படி வலி தீர்ந்து கெர்ப்பம் தரிக்க வேண்டுமானால் பழநி, ஆர். எம். கே. வேலுசுவாமி கெர்ப்ப சஞ்சீவி எண்ணெய் சாப்பிடுங்கள்.

தபால் செலவு உள்பட ரூ. 7-10-0.

தங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி! விபரமாய் எழுதுங்கள். கேட்லாக் இலவசம்.

பிரதம வைத்தியர் & மானேஜர் :—சித்த வைத்தியக் களஞ்சியம் ஆர். எம். கே. சிவசுப்ரமணிய ஐயர்.

ஆர். எம். கே. வேலுசுவாமி, சித்த வைத்தியசாலை,
தபால் பெட்டி நெ. 16, (டெலிபோன் நெ. 219) பழநி. (S.I.)

— 9-ம் பக்கத் தொடர்ச்சி —

மக்கள் கேட்பார்கள். "ரஷ்யப் பேராபத்திலிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள்" என்று "இம்ரே நாகி" சர்க்கார் ஐ. நா. சபையை கோரியதற்குப் பதிலாக, அமெரிக்காவை அழைத்திருந்தால் நிலைமை என்ன ஆகியிருக்கும்? அப்படி அமெரிக்கா அங்கு தலையிட்ட தானாலும் ரஷ்யாவின் வாதப்படி அது ஒன்றும் தவறாகாது.

சீனாவில் சட்டப்படி அமைந்த சர்க்காராக 1950 வரை செயலாற்றிக் கொண்டிருந்தது, சியாங்காய் ஷேக் சர்க்கார். அப்போது நடைபெற்ற உள்நாட்டுப் போரில் ஈடுபட்டிருந்தவர்கள் சியங்கே ஷேக் சர்க்காரும் சின கம்யூனிஸ்ட்களும் தான். சீனாவில் நடைபெறும் உள்நாட்டுப் போரில், ரஷ்யர்கள் தூண்டுதலால், அவர்கள் ஆயுதங்களை வைத்துக்கொண்டு, சட்டபூர்வமான சர்க்காரை எதிர்க்கிறார்கள் என்று கூறிக்கொண்டு, சியாங்காய் ஷேக் ஆதரவைப் பயன்படுத்திக் கொண்டு, கம்யூனிச முறையாலான சர்க்கார் அமைக்கப் போராடுகிறார்கள் கம்யூனிஸ்ட்கள். அது எங்களுக்குப் பிடிக்காதது, எங்கள் வாழ்வுமுறை சர்க்கார்தான் இருக்கவேண்டும் என்று உலகத்தில் உள்ள எந்த முதலாளித்துவ நாடுகளும் துருப்புகளை அனுப்பி கம்யூனிஸ்ட்களை ஆயிரக்கணக்கில் கொன்று போடவில்லை. அவைகள் மறைமுக ஆதரவு அளிப்பதோடு நிறுத்திக் கொண்டதே ஒழிய, நேரடியாக ஈடுபடவில்லை. அப்படி அவைகள் அன்று நடந்துகொண்டாலும், இன்று ரஷ்யாவின் வாதப்படி தவறாகாது.

ஐஸ்லாந்து என்று ஒரு நாடு உள்ளது. அந்நாட்டில் அமெரிக்கா தன் படை தளத்தை அமைத்துக் கொண்டிருந்தது. தற்போதைய சர்க்கார் அமெரிக்க படை தளம் காலி செய்யப்பட வேண்டும் என்று கோரியது. அமெரிக்காவும் மூட்டை கட்டிக் கொண்டிருக்கிறது. ஆனால், அதற்கு மாறாக வார்சா ஒப்பந்தத்தைத் காட்டி ரஷ்யா, விரும்பாத நாடுகளில் எல்லாம் தன் படை தளத்தை வைத்துக் கொண்டு காலி செய்ய மறுக்கிறது.

வார்சா ஒப்பந்தப்படி தான் நடந்தாக வேண்டும் என்று ரஷ்யா வற்புறுத்திக் கொண்டு, தனது செயலுக்கு நியாயம் கற்பிக்க முயலுமேயானால், 1888ம் வருட கான்ஸ்டான்டி நோபில் ஒப்பந்தப்படிதான் நடந்துகொள்வேன், எனக்கு இன்னும் பன்னிரெண்டு ஆண்டுகள் சுரண்ட உரிமை உண்டு" என்று பிரிட்டன் கூறுமேயானால், ரஷ்ய வாதப்படி இது ஒன்றும் தவறு ஆகிவிடாது. ஆக்கிரமிப்புக்கு திரை போட காரணங்களைக் கண்டுபிடித்துக் கொண்டிருப்பதை விட, தான் செய்துள்ள மகத்தான தவறை உணர்ந்து, நேர்மையாக நடந்து கொள்வதுதான் முறையாகும். நிலைமை இவ்வாறு இருக்க ஐ. நா. சபையில் அங்கேரி விஷயமாக விவாதம் நடைபெற்றது. முடிவில், அங்கேரியில் உண்மை நிலையை ஆராய்ந்து ஐ. நா. சபைக்கு அறிவிப்பு செய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. இதை இந்தியா உட்பட பெரும்பான்மையான நாடுகள் ஆதரித்தன. மூவரைக் கொண்ட கமிட்டியும் அமைக்கப்பட்டது. ஆனால், ரஷ்யாவும் அங்கேரிய பொம்மை சர்க்காரும் எதிர்த்தன. உள்நாட்டில் உள்ள நிலைமையை அறிவதைக் கூட அங்கேரிய சர்க்காரும், ரஷ்ய சர்க்காரும் எதிர்க்கின்றன என்றால் காரணம் என்ன? நிரபராதியானால் நிச்சயம் அனுமதித்திருப்பார்கள். ஆனால் அவர்களது குற்றமுள்ள நெஞ்சு இதை அனுமதிக்க மறுக்கிறது, என்பதைத் தவிர வேறு காரணத்தை நம்மால் கண்டு கொள்ள முடியவில்லை. இந்த ஒரு செயலே அவர்கள் குற்றவாளிகள் தான் என்பதை நிச்சயப்படுத்துகிறது.

—மாக்சிஸ்ட்

வெளிவந்துவிட்டது.

1957-ம் ஆண்டு

திராவிடர் டயரி

தி. மு. கழக முழு விவரங்கள், 1200 தி. மு. க. கிளைகளின் விவரம், பேச்சாளர் முகவரி, அஞ்சல் செய்திகள், வருமான வரி, விற்பனை வரி விவரங்கள் 365 பொன்மொழிகள் அடங்கியது.

விலை ரூ. 1—0—0

விற்பனையாளர் கழிவு 20 சதவிகிதம். செலவு தனி.

தனிப்படி வேண்டுவோர் ரூ. 1—8—0 அனுப்பவும்.

குறிப்பு: புதுவிதமான பொங்கல் வாழ்த்துகள் பல தயாரிக்கப்பட்டுள்ளன.

'போர்வாள்' அலுவலகம்,
128, பிராட்வே, சென்னை.

மணத்திற்கும், மனத்திற்கும் தொடர்புண்டு

எங்கும் கிடைக்கும்.

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக்கல்வி நிலையம்,

60, பிராட்வே—மண்ணடி—சென்னை-1.

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில் இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் திருத்தமாக நேரில் கற்கலாம்

சென்ற வருட நவம்பர் மாதம் ஆரம்பமாகிய இங்கிலீஷ் வகுப்புகள் இந்த வருட நவம்பரில் முடிவடைந்தன.

புதிய வகுப்புகள்

டிசம்பர் 10-ந் தேதி ஆரம்பமாகின்றன

வகுப்பில் சேர விண்ணப்பம் செய்துகொள்ள

கடைசி தேதி: 9—12—1956

முழு விவரங்களை நேரில் வந்து தெரிந்துகோள்க.

இலக்கண ரீதியாக இங்கிலீஷில் பேசவும், சொந்தமாகக் கட்டுரைகள், கடிதங்கள் எழுதவும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். காலையிலோ மாலையிலோ வசதியான நேரத்தில் வகுப்பிற்கு வந்து ஒரு மணி நேரம் படித்தால் போதுமானது.

முக்கிய அறிவிப்பு:—16 வயதிற்கு மேற்பட்டவர்களே இவ் வகுப்புகளில் சேரலாம். பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவரும் இங்கு நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து திருத்தமாகக் கற்றுப் பயனடையலாம்

ஆளும் கருத்த ஆளு அரண்மனைக்கு ஏத்த ஆளு

'மாசிமழை பெய்யாதோ
மலையும் வெள்ளம் சாயாதோ
ஏத்துமீன் ஏருதோ
எங்க பஞ்சம் தீராதோ'

ஊரெல்லாம் வரட்சி. வயல் வெளிகளெல்லாம் காய்ந்து கிடந்தன. மாசிப்பட்டத்து மழைக்காக—அந்த மழை காரணமாக வரும் வெள்ளத்தை — அந்த வெள்ளத்தோடு வெள்ளமாய் வந்து அதன் காரணமாக ஏற்பட விருக்கும் வளத்தை எடுத்துக் காட்டும் மீன் கூட்டத்தை எதிர்பார்த்து நாங்கள் ஏங்கித் தவித்தோம். சோலைவனமாக இருந்த ஊர்ப்பகுதி கற்ருழையும் கள்ளியும் நிரம்பியதாக நின்றது. ஒருநாள் வயல் வெளிகளில் மழை வரும் என்ற நம்பிக்கையோடு உழுதுவிட்டுக் களைப்புத்தீர மண்மேட்டில் படுத்துத் தூங்கினேன். அங்கேதான் கள்ளிவளசலும் இருந்தது. தூங்கி நான் எழுந்த போதுதான் அவளை முதன் முதலாகக் கண்டேன். அவள்--

'ஆளும் கருத்த ஆளு
அரண்மனைக்கு ஏத்த ஆளு
இடையும் சிறுத்த இடை
எவன் கொண்டு போருனே?

—என்னும்படியாக இருந்தாள். மை திட்டாமலே கூர்மையாகத் தெரிந்த அவளது கண்களும், இருண்ட வர்ணத்தில் ஒளிவிடும் மின்னலைப்போல கருமை நிறைந்த முகத்தில் சிராக அடுக்கி வைக்கப்பட்டிருந்த பல்வரிசையும் – என் மனதை அவள் பக்கம் ஈர்த்துவிட்டன. அவளை எனக்குப் பிடித்துவிட்டது. அவளுக்கும் அப்படித்தான் இருந்திருக்க வேண்டும்.

இடையும் சிறுத்த இடை எவன் கொண்டு போருனே?

அவளையே நான் பார்த்துக்கொண்டிருந்ததைக் கண்டு 'களுக்'கென்று சிரித்தாள் அவள். நான் நினைவுலகத்திற்கு வந்தேன். உற்சாகம் வரும்பொழுது வெற்றிலை போடுவது என் பழக்கம். அதிலும் என் எதிரில் நின்ற அவளும் வெற்றிலை போடத் தொடங்கும்பொழுது...?

வெற்றிலைப் பெட்டியைத் தேடினேன். வெற்றிலை, சுண்ணும்பு... பாக்குதான் இல்லை. என்ன செய்வது? நிலையை அவள் புரிந்து கொண்டாள்.

'பாக்கு வேணுமா?...' அவள் கேட்டாள்.

'ம்...' கொட்டினேன் நான்.

'எங்கிட்ட ஒரு பாக்குத்தான் இருக்கு. ஆனுல் நானும் வெத்திலே போடணும். கொஞ்சம் இருங்க. இந்தப் பாக்கை இரண்டா உடைச்சுத் தாரேன்...'

நான் பொறுமையோடு காத்திருந்தேன். அவள் பாக்கை உடைப்பதற்கு எங்கெங்கோ கல் தேடினுள். கிடைத்தால் தானே! அகப்பட்டதெல்லாம் செங்கல்லும் மண்ணுங்கட்டியும்தான். ஆனுல் என்னை அவ்வளவு நேரம் காக்க வைத்துக் கொண்டிருப்பது அவளுக்கு பிடிக்கவில்லை போலிருக்கிறது! அதை அவள் முகம் காட்டிய அவசரம் வெளிப்படுத்தியது. இன்னும் கொஞ்சநேரம் கல் தேடுவதில் கழிந்தது. பிறகு ஏதோ முடிவுக்கு வந்தவள் போல அவள் கள்ளிச் செடிகளுக்குள்ளே புகுந்தாள். என்ன செய்கிருள் என்ற ஆவலில் நான் எழுந்து நின்று பார்த்தேன். அவள் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு பாக்கை வாயில் போட்டு இரண்டாகக் கடித்துக்கொண்டு வந்தாள். பாக்கிலிருந்த தன் எச்சிலையும் துடைத்துக் கொண்டாள். இதையெல்லாம் நான் பார்த்துக் கொண்டிருந்ததை அவள் கவனிக்கவில்லை. நானும் பார்த்துவிட்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை.

'என்ன...கல் கிடைத்ததா...?' என்றேன் நான்.

'ஆமாம் கிடைத்தது — அங்கேயே உடைத்துக் கொண்டு வந்துவிட்டேன். இந்தாருங்கள்...' என்று ஒரு பாக்குத் துண்டை என்னிடம் கொடுத்தாள். பொய் சொல்லிவிட்டோமே என்று அவள் உதட்டைக் கடித்துக் கொண்டதை நான் ஓரக் கண்ணுல் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன்.

நான் வெற்றிலைபோடத் தொடங்கினேன். அவளும் எனக்கு எதிரில் கொஞ்ச தூரத்தில் உட்கார்ந்து கொண்டு வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தாள். காவி ஏறிய அவளது உதடுகள் என்னைக்கிறங்க வைத்துவிட்டன. அதோடு ஏதோ ஒரு மயக்கம். நான் கொஞ்சதூரம் நடந்து சென்றுவிட்டுத் திரும்பலாம் என்று எழுந்து நின்றேன். என்னுல் நேராக நிற்கமுடியவில்லை. திரும்பவும் கீழே உட்கார்ந்தேன். என்னுல் பாடாமலிருக்க முடியவில்லை.

'கள்ளி வளசலிலே
கடிச்ச பாக்குத் தந்த புள்ளே
நீதந்த சொள்ளைப்பாக்கு
நிக்க நிக்கச் சொக்குதடி...'

பாட்டின் உற்சாகத்திலேயே அவள் பாக்கைக் கடித்துத் தந்ததை நான் பார்த்துவிட்ட உண்மையையும் ஒப்பித்து விட்டேன். அப்பொழுது பார்க்க வேண்டுமே அவள் முகத்தை! தன்னுடைய இயற்கையான கருப்பு நிறத்தை எங்கோ விலைக்கு விற்றுவிட்டு சிவப்பு நிறத்தை உடமையாக்கிக் கொண்டது போலக் காட்சியளித்தது அது. அவள் எழுந்து ஓடியே போய்விட்டாள்.

ஒருநாள் நான் அவசரமாக ஒருவரைத் தேடிப் போய்க் கொண்டிருந்தேன். அவர் எங்களுக்குப் பணம் தரவேண்டியதிருந்தது. பல முறை கேட்டும் அவர் தருகிற பாட்டைக் காணும். கூடுமானவரை என் கண்ணில் தட்டுப்படாமலே ஏமாற்றிக்கொண்டு வந்தார். அவரைத் தேடித்தான் அன்றும் நான் போனேன். வீட்டில் இல்லை வயலில் இருக்கலாம் என்று சொன்னுர்கள். அங்கேயாவது போய்ப் பிடித்துவிடுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு விரைவாக நடந்தேன், ஊர் மேற்கில் உள்ள கோவிலை நெருங்கி விட்டேன். அங்கே யாரோ விரைவாகப்போய்க் கொண்டிருந்தது தெரிந்தது. நான் உற்று கூர்மையாகப் பார்த்தேன். யார் என்கிறீர்கள்? அவளேதான்! கடன் வாங்கியவரை வாழ்த்திக் கொண்டே நான் உரக்கப் பாடினேன்.

'ஊருக்கு மேல்புறமாம்
உலகம்மன் கோயிலுமாம்
கோகிலம்போல் போற தங்கம்
கொஞ்சம் நின்னு போனு
லென்ன?...'

—பாட்டைக் கேட்டதும் அவள் நின்றுவிட்டாள்.

'நீங்கதானு...! யாரோண்ணுல்ல நினைச்சேன்...' என்ருள் அவள்.

'நான்கூட நீ வேறு யாரோண்ணு தான் முதலில் நினைச்சேன்...' என்றேன்.

பிறகு எதை எதையோ பேசினும். ஒருவர் மனதை இன்னெருவருக்குத் திறந்து காட்டிக் கொண்டோம். நெடுநேரம் திரும்பிப் பார்த்துக் கொண்டே எங்கள் வழியே போனும். அவள் பெயர் ரத்தினமாம்! பேச்சோடு பேச்சாக அதையும் நான் கேட்டுக் கொண்டேன்.

அன்று எனக்கு வேலை இல்லை. வீட்டில் 'சும்மா' உட்கார்ந்து கொண்டிருப்பதும் பிடிக்கவில்லை. காலைநேரம். கொஞ்சம் தோப்புப் பக்கம் நடந்துவிட்டு வந்தாலென்ன என்ற எண்ணத்தோடு புறப்பட்டேன். வழியில் எங்காவது அவள் வந்து பார்க்கமாட்டோமா என்ற ஆசை ஒரு பக்கம் தான்...! என்ன செய்வது அதை எங்கே நிறுத்த முடிகிறது? அன்று எங்கள் ஊருக்கு அருகிலுள்ள ஒருகோவில் திருவிழா. அதற்கென்று ஏராளமான வெளியூர் மனிதர்கள் வண்டி கட்டிக்கொண்டு வந்திருந்தார்கள். அவர்களில் பலர் அந்தத் தோப்புப் பாதையில் வந்துகொண்டும் போய்க்கொண்டும் இருந்தார்கள். இந்தச் சந்தடியில் அவளை என் கண்ணுல் காண முடியவில்லை. என்ருலும் ஆவலோடு நடந்து கொண்டிருந்தேன். திடீரென்று ஒரு பாட்டு. என் உடம்பை புல்லெறித்தது. ஆமாம், அவள் குரல் தான். ரத்தினத்தின் குரலேதான்!

'மேமலையாம் ஓரத்திலே
—தங்கரத்தினமே
வேட்டையாடும் நேரத்திலே
—பொன்னு ரத்தினமே
மச்சானைக் கண்டேனடி
—தங்க ரத்தினமே.
மல்லிகைத் தோட்டத்திலே
—பொன்னு ரத்தினமே
மச்சான் வாசம் புடிக்கையிலே
—தங்க ரத்தினமே
மருக்கொழுந்து வாடிடுமே
—பொன்னு ரத்தினமே,'

அவள் அவளுக்கே பாடிக் கொண்டு, தான் கொண்டு வந்த சுமையைக் கீழே இறக்கி வைத்தாள். பிறகு எதை எதையோ எங்கெங்கோ வைத்து கடை விரித்தாள். வரிசையாக இரண்டு மூன்று பானைகள். எல்லாம் தயிர்! அந்தப் பாதையில் வந்து போகும் வெளியூர்க்காரர்களுக்குச் சாப்பாட்டிற்குத் தேவையான தயிர் எடுத்துக் கொண்டு வியாபாரம் செய்ய வந்திருக்கிருள் அவள். நான் அங்கேயே நின்று அவள் வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டிருந்தேன். கொஞ்ச நேரம்தான் என்னுல் அப்படி வேடிக்கைப் பார்த்துக் கொண்டு நிற்க முடிந்தது. 'ஊதாக் கருப்புச் சேலை - எடுத்துடுத்தும் எள்ளுக் கருப்புச் சேலை' போன்ற நிறமுடையவளாக இருந்தாலும் என்னைக் கவர்ந்துவிட்ட அவளது அழகான தோற்றம் வழக்கம்போல என்னை மயக்கியது, அவளைக் கண்டதும் எப்போதும் ஏற்படுகிற 'கிறுக்கு' வந்துவிட்டது.

'வா! ரத்தினம்...இன்று எனக்கு வேலை இல்லை. அப்படியே மலை அடிவாரம் வரை போய் வரலாம்...' என்றேன். எங்கள் ஊர்மலை அடிவாரம் காதலர்களின் பூங்கா. அங்கே போனுல் பொழுது போவதே தெரியாது. பாம்புகளைப் போல பின்னிப் பிணைந்து இந்த உலகத்தையே மறந்து விடலாம்.

'இன்னும் இரண்டு பானை தயிரு விக்கணும். வித்தாத்தான் வீட்டுச் செலவுக்குக் காசு வரும்...' என்ருள் அவள்.

ஆசையோடு நான் அழைத்தும் அவள் வராதது எனக்கு ஆத்திரத்தை உண்டாக்கியது. என்ருலும் கடைசி முறையாகக் கூப்பிட்டு விடுவது என்று நான் அவளைக் கூப்பிட்டேன்:

'சஞ்சணக்கான் தோப்புக்குள்ளே
தயிரு விக்கும் சின்னப்புள்ளே
தயிருபோனு உயிராபோகும்
தங்கரத்தினமே
வாடி நாம் போகலாமே
பொன்னுரத்தினமே'.

அவள் கண்டிப்பாக மறுத்துவிட்டாள். நான் அமைதியில்லாத மனத்தோடு மலையடிவாரத்தை நோக்கி நடந்தேன். இடையில் பனைமரத் தோப்பு. அங்கே எனக்கு மிகவும் வேண்டிய சிநேகிதன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். அவன் திருட்டுத்தனமாகக் கள் இறக்குபவன். என்னை எத்தனையோ முறை அவன் கூப்பிட்டும் நான் போக மறுத்திருக்கிறேன். அப்படிப் பட்ட என்னை அந்த இடத்திலேயே கண்டு விட்டதால் கட்டாயமாக நான் அதைக் குடிக்கும்படி அவன் வற்புறுத்தினுன். எனக்கு அப்போதிருந்த மனநிலையில் குடிப்பது தப்பாகப் படவில்லை. அவன் தந்ததை எல்லாம் குடித்தேன். தள்ளாடித்

தள்ளாடி வீட்டை நோக்கி நடந்தேன். வாய் தன் போக்கில் என்னென்னவோ பாடியது:

'கண்டியிலே காப்பித் தண்ணி
-தங்கரத்தினமே
கடலோரம் உப்புத் தண்ணி
-பொன்னு ரத்தினமே
மதுரையிலே பம்புத் தண்ணி
-தங்கரத்தினமே
மயக்குதடி கள்ளுத் தண்ணி
-பொன்னு ரத்தினமே
தேடக் கிடைக்காத என்
-தங்கரத்தினமே
தனித்தே நாம் போவோம் வாடி
-பொன்னு ரத்தினமே

'சஞ்சணக்கான் தோப்பு'ப் பாதையில் நான் வந்து கொண்டிருந்தபோது நான் எங்கேயோ மிதந்து செல்வது போல உணர்ந்தேன். எதிரில் இருப்பது எதுவும் சரியாகத் தெரியவில்லை. கண்கள் மங்கலாகத் தெரிந்தன. என்ருலும் ரத்தினம் நின்ற இடம் மட்டும் எனக்குத் தெரியாமல் போகவில்லை. நான் வந்து விட்டதை அறிவிக்கும் கட்டியக்காரனுக என் வாயே வேலை பார்த்தது.

இதற்குமேல் என்னுல் பாட முடியவில்லை. கல் தடுக்கி 'தடால்' என்று ரத்தினத்தின் அருகிலேயே விழுந்தேன். அவசர அவசரமாக என் அருகில் வந்தாள் அவள். 'அடப் பாவி...குடிச்சா இருக்கே...' என்ற அவளது குரல் தவிர வேறு எதுவும் எனக்குக் கேட்கவில்லை. நான் உணர்வற்றுப் போனேன்.

—ப புகழேந்தி

உலகம் பலவிதம்

கொள்கையோ கொள்கை !

சென்றவாரம் விழுப்புரம் பகுதியில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. தோழர் ஏ. கோவிந்தசாமியும் மற்ருெரு எம். எல். ஏ, யும் ஒரு பள்ளித் துவக்க விழாவில் கலந்து கொண்டிருக்கிருர்கள். அன்றைய தினம் சொற்பொழிவில் தோழர் கோவிந்தசாமி அவர்கள் அந்தத் தொகுதியில் தான் ஆற்றிய தொண்டு குறித்தும், அந்தத் தொண்டு பள்ளித் துவக்க விழாவிற்கு எவ்வளவு துணைபுரிந்திருக்கிறது என்றும் தெளிவாக எடுத்துப் பேசியிருக்கிருர். அதே கூட்டத்தில் கலந்துகொண்ட இன்ஞெரு எம். எல். ஏ, தோழர் கோவிந்தசாமி கூறியதை எல்லாம் ஆதாரமில்லாமல் கண்டித்துப் பேசிஞராம். ஏதோ எம். எல். ஏக்களுக்குள், சட்டசபையில் நடப்பதைப்போல் வெளியிலும் நடக்கிறது, என்று எண்ணிஞல்கூடப் பரவாயில்லை. இருவருக்கும் மத்தியில் இருந்த கனம் எஸ். எஸ். ராமசாமிப் படையாச்சி அவர்கள் மிக மிகக் கீழ்த்தரமான முறையில் நடந்துகொண்டிருக்கிருர். எம். எல், ஏக்களின் தகராறைத் தீர்த்து வைக்க வேண்டியவர்-தவருகவோ, சரியாகவோ அத்தகைய பொறுப்பினை ஏற்றுக்கொள்ளவேண்டியவர் என்ன செய்தார்? "இந்த எம். எல். ஏக்களுக்கும் இந்தப் பள்ளிக் கூடத்திற்கும் சம்பந்தமில்லை. நான் மந்திரியானதால்தான் இந்தப் பள்ளியே உருவாயிற்று" என்று பேசியிருக்கிருர். சரி, தொலைகிறது. மந்திரி கீர்த்தி தேடிக்கொள்கிருர் என்று விட்டுவிடுவோம். ஆஞல் அவர் அதோடு விட்டுவிடவில்லையே ! 'நமக்குள் தகராறு வேண்டியதில்லை. சர்க்கார் எந்தக் கட்சியோ அந்தக் கட்சிதான் நாமெல்லாம்" என்று அவர் வெளிப்படையாகச் சொல்லியிருக்கிருர். வேறு நாடாக இருந்தால் இப்படிப்பட்ட 'வெளவால்களை' விட்டு வைக்கவேமாட்டார்கள். சர்க்கார் எந்தக் கட்சியோ அந்தக் கட்சியாம்! இதற்கு என்ன பொருள் ! அடுத்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு வேறு எந்தக் கட்சி மந்திரிசபை அமைத்தாலும் அங்கேயும் எனக்கு இடங்கொடுங்கள் என்று கேட்கிருர் படையாச்சி ! கேட்பது மட்டுமல்ல, நான் தயார்; என்னை அழையுங்கள் என்கிருர். மற்றக்கட்சிகள் ஒன்றும் ராமசாமியாரைக் கூட்டி வைத்துக் கொள்கிற அளவுக்கு வற்றிப்போன கட்சிகள் அல்ல ! நாட்டிலே புத்திசாலிகள் நிறைய இருக்கிருர்கள். கொள்கைப் பற்றுமிக்கோர் ஏராளமாக இருக்கிருர்கள். காங்கிரசைப் போல் ஆள் பஞ்சம் ஏற்பட்ட கட்சிகள் தமிழகத்தில் இல்லை ஆஞல் ஒன்று மட்டும் உண்மை. எந்தக் மந்திரி சபை அமைந்தாலும் ராமசாமியாரை அந்தக் கட்சி மறக்கவே மறக்காது. தண்டிக்கப்பட வேண்டியவர் என்று எப்போதோ முடிவு செய்திருப்பார்கள். ஐயோ பாவம் ! ராமசாமியார் நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு நிற்கிருர் ! கொள்கை வீரர் கோவிந்தசாமி எங்கே? சேவற்கொடியைச் சாகடித்த ராமசாமி எங்கே?

★

நீதிபதியின் ரசமட்டம் !

விடைபெற்றுப் போகும் கவர்னர் பிரகாசாவுக்கு நவ 25ம்-தேதி சென்னை நகர் பிரமுகர்கள் புகழ் மாலை சூட்டிஞர்களாம் ! ஆச்சாரியார் கவர்னரை வெகுவாகப் புகழ்ந்தாராம் ! அவரது தொண்டர் சுப்ரமணியம் கவர்னரின் தொண்டை வர்ணித்தாராம். முத்தையா செட்டியாரும். அம்புஜம்மாளும் "ஆகா ! பிரகாசாவைப் போலுண்டா' என்று சம்பிரதாயப்படி பேசிஞர்களாம் ! ஆஞல் பிரதம நீதிபதி பி. வி. ராஜமன்ஞர் இருக்கிருரே அவர்தான் பிரமாதமாக விமர்சித்தாராம் பிரகாசாவின் தொண்டைப் பற்றி ! உண்மையான விமர்சனமும் அதுதான் என்கிருர்கள்.

"பிரகாசாவிடம் உள்ள ஒரே ஒரு குறை அவர் வடநாட்டுக்காரர், ஆஞலும் தமிழ்மக்கள் சகிப்புத் தன்மையோடு இருந்தார்கள்" என்று நீதிபதி பேசிஞராம் ! இதற்குப் பலர் பல பொருள் காண்கிருர்கள். நாமோ, பிரகாசா தமிழர்களின் பொறுமையைச் சோதித்தார் என்ற பொருளில்தான் நீதிபதி பேசியிருக்க வேண்டுமென நினைக்கிரோம்.

ஒப்புயர்வு கோண்ட நாவல்

கிடைக்குமிடம்:

மலர் நிலையம்

133, பிராட்வே, சென்னை-1.

நான் திருடனு ?

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

முடியும் என்ற சபலம் என்னை அந்தத் தொழிலில் இறக்கிவிட்டது.

நான் திருடியதைக் குற்றமென்கிருர்கள். திருடியாவது தந்தை பட்ட கடனைக் கட்டவேண்டும் என்று நான் எண்ணியதைப் பாராட்ட இந்தத் தமிழ்நாட்டில் ஆள் இல்லையே !

நான் பலமுறை கைது செய்யப்பட்டிருக்கிறேன்; அதுபோல பல முறை பல போலீஸ் அதிகாரிகளையும் ஏமாற்றியிருக்கிறேன். என்னை மூன்று முறை சந்தேகத்தின்பேரில் கைது செய்திருக்கிருர்கள்; என் கையில் இருக்கும் பணத்தை அவர்கள் எடுத்துக்கொண்டபின் எப்படியோ என்மீது இருக்கும் சந்தேகம் திடீரென்று போய்விடுகிறது ! திருடிஞல்தானே திருடர்களை அறியமுடிகிறது ! என் செய்வது !

நான் திருடிய நகைகளில் பெரும் பகுதியைப் பணமாக்கி ஏழைகளுக்கே செலவுசெய்திருக்கிறேன். குறிப்பாக, ஆதித்திராவிட மக்களுக்கே கொடுத்திருக்கிறேன். குறிப்பிடத் தகுந்த சில வழக்குகளில், என்னிடம் உதவிபெற்ற எத்தனையோ தாய்மார்கள் எனக்காகப் பரிந்து சாட்சி சொல்லி இருக்கிருர்கள் ! அவைகளையெல்லாம் நினைத்து நான் இப்போதும் பெருமைப்படுகிறேன். தீய காரியத்தைச் செய்து பத்து நல்ல காரியங்களுக்கு உதவியதாகவே கருதுகிறேன். இது எனக்குப் பெருமைதானே !

1945 ல் ஆரம்பித்த திருட்டுத் தொழிலை 1954 ல் நிறுத்திக்கொண்டேன். வந்ததும் அதே ஆண்டில் கனகவல்லி என்ற பெயருடையாளை நான் திருமணம் செய்துகொண்டேன். இப்போது எங்களுக்கு கோபிநாதன் என்ற மகன் இருக்கிருன். அவனுடைய தந்தை 'மாஜிக் கேடி' என்று அவனுக்குத் தெரியாது. கனகவல்லிக்குத் தெரியும். எப்படியோ இப்போது பல்லைக் கடித்துக்கொண்டிருக்கிறேன்.

சிறையிலிருந்து வந்தவர்களுக்கு உதவிபுரியும் சங்கம் இருப்பதாகச் சொன்ஞர்கள். அங்கு போய் உதவி கேட்டேன். கனம்கள்,

சி. சுப்ரமணியம்

பக்தவத்சலம்

பரமேஸ்வரன்

—ஆகியோரிடம் சென்று உதவி செய்யுங்கள் என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டேன். கருணையில்லை அந்தக் 'கனம்'களுக்கு ! இதற்கெல்லாம் என்னிடம்ஆதாரங்கள் உண்டு. இப்படி அவர்கள் பதில் சொல்லும்போதுதான் மறுபடியும், மறுபடியும் என் அகக்கண்களுக்கு வட்டிக்கடையினரும் வாட்டசாட்டமான மார்வாடிகளும் தெரிகிருர்கள். என்ருலும் மனதை அடக்கிக் கொள்கிறேன். என் மனைவியும் மகனும் என்முன் விழுந்து தடுப்பது போலிருக்கிறது.

சிறையில் நான் இருந்தேனே, அங்கே ஏதாவது ரவுடித்தனங்கள் செய்திருக்கிறேஞ? இல்லை, உயர்திரு, டி. ஜி. தாமோதர நாயுடு (போலீஸ் இலாகா) ஜி. ஜானகிராம், பக்கிரிசாமி பிள்ளை எம். எல். ஏ., கவுன்சிலர் கோவிந்தசாமி, தாழ்த்தப்பட்டோர் நலஉரிமைச் சங்கத்தைச் சார்ந்த கே.எஸ். மணி, சிவசண்முகம் பிள்ளை, ரத்தினம் எம். எல். ஏ, கக்கன் ஆகியோரது உறுதிக்கடிதங்கள் என்னுடை அடக்கத்தைச் சொல்லும் சாக சித்திரங்களாக என்னிடமிரு கின்றன. இது என் கதையி மிகச் சுருக்கமான வரலாறு என் கதையை வெளிப்படையா சொல்லிவிட்டேன். சொன்ஞ என்ன ! நீங்கள் தமிழர்கள் தானே எனது சகோதரர்கள் தானே உங்களில் ஒருவனின் சோக வ லாறு எப்படி இருக்கிறது பார்த்தீ களா? 'அந்தத் தமிழன்', 'இந்த தமிழன்' என்றெல்லாம் பே கிரோமே, அப்பேர்ப்பட்ட தமி னின் வரலாறு ஐயா இது ! இனி கிறதா? சொல்லுங்கள் ! செத்து செத்துப் பிழைக்கிறேன். யாரு காக? என் மனைவி மக்களுக்கா வேலை தேடிக்கொண்டிருக்கிறேன் கிடைத்தால் கண்ணியமாக வா முடியும். கிடைக்காவிட்டால் என்ன செய்வது ! ஒரு வழி சொல்லுங்க திருடுவதைத் தவிர ! எந்த வேலை யாக இருந்தாலும்சரி, நான் செய் பிழைக்கத் தயாராக இருக்கிறேன் உதவி செய்யுங்கள் !

கடைசியாக ஆச்சாரியாருக்கு ஒ கடிதம் எழுதினேன். 20-11-56 அவர் எழுதிய கடிதத்தில், 'அதை பற்றிப் பேசச் சவுகரியமும் இல்லை மனமும் இல்லை' என்று துணிந் எழுதிவிட்டார்.

20-11-56 ம் தேதி பக்கிம்ஹா கர்ஞடிக் மில்லிருந்து வேலை இல் என்று பதில் வந்துவிட்டது. என்ன செய்வதென்றே தெரியவில்லை நான் இரண்டொரு இடங்களி வேலை பார்த்தேன். அங்கெல்லா 'நான் திருடன்' என்று வேலையை விட்டுப்போகச் சொல்லிவிட்டா கள். திகைக்கிறேன். என்னுடை கடந்தகால நிகழ்ச்சிகளை நின வுறுத்தும் வகையில் என் முது லுள்ள ஆபரேஷன் உறுத்தி கொண்டிருக்கிறது

த. ரங்கநாதன்

தி. மு. க. தேர்தல் நிதிக்கு

15-12-56 சனி கால

9-மணிக்கு

திருச்சி தேவர் மன்றத்தில்

சிறப்புக் கூட்டம்

தலைவர்: எம். எஸ். மணி

சொற்பொழிவாளர்கள்:

நாவலர் இரா. நெடுஞ்செழியன்

(இலக்கிய இன்பம்)

புரட்சி நடிகர்:

எம். ஜி. ராமச்சந்திரன்

(கலையும் வாழ்வும்)

என்பது பற்றிப் பேசுவார்கள்.

நன்கொடை: ரூ. 1, அணு 8.

திருச்சி நகர தி. மு. க.

பட்டினிப் போர் !

திருப்புத்தூர்: 23-11-56. சென்னை மாநிலத்திற்குத் தமிழ் நாடு எனப் பெயரிடக் கோரி யும், பெயரிடும் நாளைத் திட்ட வட்டமாய் ஆட்சியாளர்கள் அறி வித்துவிட வேண்டுமென்றும், ராபர்ட் என்னும் இளைஞர் இவ்வூர் பஸ் நிலையத்தினருகில் உள்ள பிள்ளையார் கோவில் முன்பாக 22-11-56உ முதல் உண்ணுவிரதமிருந்து வருகிருர். நகர தாசில்தார் அவர்களும் போலீஸ் அதிகாரிகளும் பார்வையிட்டுச் சென்றுள்ள னர். (ந. நி.)

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்நா